Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 8.00

FREE COPY NOT FOR SALE

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 சித்திரை- 29 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-ஆகிர் 03 (12.05.2005) வியாழக்கிழமை இதழ்:225




## நவம் அறிவுக்கூட கட்டடம் தேசியத் தலைவரால் திறப்பு!





(கிளிநொச்சி)

லெப். கேணல் நவம் அறிவுக்கூடத்தின் புதிய கட்டடத்தை தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்றுமுன்தினம் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழீழத் தேசியத் தலைவர் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், விழாவின் ஆரம்பநிகழ்வாக பொதுச்சுடரை ஏற்றிவைத்தார்.

லெப். கேணல் நவத்தின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றினார்.

திருவுருவப்படத்துக்கான மலர் மாலையை லெப். கேணல் நவத்தின் தந்தையார் அணிவித்தார். தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவர் மலர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு பல்கலை சமூகம் கண்டன ஆர்ப்பாட்டம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - சந்திவெளியில் இராணுவத்தினருக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட மக்கள்மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இனவெறியாட்டத்தைக் கண்டித்து கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

காலை 9 மணிமுதல் 11 மணிவரை பல்கலைக்கழகத்துக்கு முன்பாக கூடிய மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் உட்பட பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இப்படியான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமலிருப்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

சம்பவத்தின்போது இடம்பெற்ற கொலை மற்றும் தாக்குதலுடன் தொடர்புடைய இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக்கட்டமைப்பை உருவாக்கப் போவதாக

# ஜனாதிபதி சந்திரிகா கூறிவருவது நிதி பெறுவதற்கான தந்திரமே!

### அவநம்பிக்கை தெரிவிக்கிறார் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் குழப்பங்களை உருவாக்கி திட்டமிட்டு அரசாங்கம் இழுத்தடித்துவரும் அதேவேளை,

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்டு வரும் கருத்துக்கள், கண்டியில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் அதிக நிதியுதவிகளைப் பெறுவதற்கான ஒரு தந்திரோபாயமாகவே உள்ளது என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். தமிழ்நெற் இணையத்தளத்துக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட் டுள்ளார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் குறிப்பிடுகையில் :-

(12 ஆம் பக்கம் பார்க்க)

### உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில்

## நிவாரண உதவிகள் குறித்தே கவனம் செலுத்தப்படுமாம்!

### அரச தரப்பு தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அடுத்த வாரம் கண்டியில் நடைபெறும்போது, சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நிவாரணங்களை விரைவாகப் பெற்றுக்கொடுப்பது குறித்தே முக்கியமாக ஆராயப்படும் என அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிவாரண உதவி வழங்கும் நடவடிக்கைகள் மிக மெதுவாகவே நடைபெறுகின்றன. விசேடமாக அதிக பாதிப்புக்குள்ளான வடகிழக்குப் பிரதேசங்களில் நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் மெதுவாக நடைபெற்று வருகின்றன.

வடகிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெருமளவான பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, ஒட்டுசுட்டான், மன்னார் பரவலாகக் கண்டனப் பேரணிகள்!







(கிளிநொச்சி)

மட்டக்களப்பு - சந்திவெளியில் பொதுமக்கள் மீது படையினரும் பொலிஸாரும் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைக் கண்டித்து கிளிநொச்சியில் நேற்று கண்டனப் பேரணியொன்று நடைபெற்றது.

காவலரண் அமைக்கும் இராணுவத்தினரைத் தடுப்பதற்கு மேற்கொண்ட அறப்போரை இனவாத இராணுவம் - தனது மிலேச்சத்தனமான நடவடிக்கை மூலம் சுட்டுக்கொன்றும் காயங்களை ஏற்படுத்தியும் உள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச கடற்படை கண்காட்சிக்கு சயுர சிங்கப்பூர் பயணம்!



(கொழும்பு)

அடுத்த வாரம் நடைபெறவுள்ள சர்வதேச் கடற்படைக் கண்காட்சியில் பங்கேற்பதற்காக - இலங்கைக் கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பலான எஸ்.எல்.என்.எஸ். சயுர சிங்கப்பூர் பயணமாகியுள்ளது.

சிங்கப்பூரில் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை சர்வதேச கடற்படைக் கண்காட்சி ஆசியா-2005 நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியை இராணுவ மற்றும் பாதுகாப்புத் தளபாட உற்பத்தி நிறுவனங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

ஆறாவது தடவையாக நடைபெறும் இந்தக் கண்காட்சி 2003 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தவருடம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யசூஷி அகாஷி கொழும்பு வந்தார்!

(கொழும்பு)

ஜப்பானின் விசேட பிரதநிதி யசூசி அகாஷி நேற்று கொழும்பு வந்துசேர்ந்தார்.

சுனாமி அனர்த்தத்தின்பின்னர் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் குறித்து ஆராயும் வகையில் அரசாங்கத்துடன், சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினருடன் ஆலோசனை நடத்துவதே அவரது விஜயத்தின் முக்கிய நோக்கமாகும்.

எட்டு நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட மிகமுக்கியமான தலைவர்களையும், அதிகாரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்கள் மீதான இராணுவ அடக்குமுறை மீண்டும் போரைத் தூண்டுகின்ற செயல்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன்



தமிழர் தாயக நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ள சிங்கள இராணுவத்தின் நடவடிக்கைகள் - தமிழ் பேசும் மக்களை மீண்டும் போராட்டத்திற்கு தயாராக்கும் செயற்பாடாகவே இருப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - சந்திவெளிக் கிராமத்தில் நடைபெற்ற இராணுவ அடாவடித்தனம் இதற்கு உதாரணமாகிறது.

போராலும், சுனாமியின் பாதிப்பாலும் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ள தமிழ் மக்களின் வாழ்விடங்களிலும், வீதிகளிலும், சனநெரிசல் உள்ள பகுதிகளிலும் அனாவசியமற்ற முறையில் முகாம்களையும், காவலரண்களையும் அமைத்துள்ள இராணுவம், சிங்கள அரசின் ஏவற் பேய்களாக செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. இவர்கள் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காக வந்தவர்களா? அல்லது தமிழ் மக்களைப் பாடையேற்ற வந்தவர்களா?

வாழைச் சேனையையும் மட்டக்களப்பையும் இணைக்கும் பிரதான வீதியில் ஏன் இராணுவ முகாம்? எனக் கேட்டு அந்த இராணுவ முகாமை அகற்றும் படி மக்கள் அகிம்சைப் போராட்டம் நடத்தினார்கள் என்றால் மக்களுக்கு பாதுகாப்பிற்கு இராணுவம் தேவையில்லை என்பதை உணர்த்தியுள்ளனர். ஆனால், அகிம்சைப் போருக்கு கிடைத்த பதில் ஆயுதங்களால் கொன்றொழித்தலும், கடுமையாகத் தாக்கப்பட்டதும் மக்கள் பிரதிநிதிகளை பயமுறுத்தியதுமே ஆகும்.

குறித்த முகாமின் இருபக்கமும் மக்கள் தமது உரிமைக் கோரிக்கையை முன்வைத்த வேளை வாழைச் சேனைப் பக்கமாக குறித்த இராணுவமுகாமின் பொறுப்பாளருடன் கதைத்துக் கொண்டு மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நின்ற வேளையும், கண்காணிப்புக்குழு அரச உயர் அதிகாரிகள் அங்கு இருந்த வேளையிலும் கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் மக்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளனர்.

இராணுவம் இவ்வாறு நடப்பதற்கு இலங்கை அரசே காரணம். பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ் ஒழுங்கற்ற இராணுவ நடவடிக்கை காரணமாகதனது அமைச்சுப்பதவியை உடன் துறக்க வேண்டும். தமிழர் பிரதேசத்தில் சிங்கள அரசின் பாதுகாப்புப்படை தேவை இல்லை என்பதை போர் நிறுத்தக் கண்காணிப்புப் குழுவும் சர்வதேச சமூகத்திற்கு இச்சம்பவத் தின் மூலம் உணர்த்திக்கொள்ள வேண் டும். இந்த ஒழுங்கற்ற கட்டுப்பாடற்ற இராணுவ நடவடிக்கை மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதே.

அமைதிக்கான சூழ்நிலையைப் போக்கி மீண்டும் ஓர் அவலம் நிறைந்த இலங்கையை தோற்றுவிப்பதற்கு சிங்கள பேரினவாதசக்திகளின் திட்டமிட்ட செயலாகவே இந்த நடவடிக்கையை பார்க்கவேண்டியுள்ளது.

இந் நிலை தொடருமானால் மீண்டும் போர் உருவாவது தவிர்க்க முடியாததாகி விடும். எனவே, இந்தச் செயற்பாடுகள் எமது தேசியத் தலைமையின் அளவு கடந்த பொறுமையை சீண்டும் விதத்தில் அமைந்ததால் இலங்கை அரசின் இராணுவ அடாவடித்தன நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இவ் விடயத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் உண்மையான பரிதாபமான நிலையை எடுத்துக் கூற வேண்டும்.

இவ்வாறாக மக்கள் பிரதிநிதிகளின் முன்னால் மக்களையே அரசபடைகள் தாக்கும் அநாகரிகமான செயல்களில் சிங்கள அரசு தொடர்ந்தும் தனது படைகளை ஈடுபடவிடுமானால் இலங்கை மீண்டும் துயரங்கள் பலவற்றை சந்திக்க நேரிடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வெளிப்படுத்துகிறேன்என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(வலிகாமம்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நிலவும் ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடம் நிரப்புவதற்கு விண்ணப்பங்களை வலயக் கல்வி அலுவலகம் கோரியுள்ளது.

ஆரம்பக் கல்வி, விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதாரம், உடற் கல்வி, இந்துசமயம், கிறிஸ்தவம், சித்திரம், நடனம் நாடகமும் அரங்கியலும், விவசாயம், வாழ்க்கைத் தேர்ச்சி, முறைசாரராக் கல்வி விசேடகல்வி ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் பாடத்தினை ஒரு பாடமாகக் கொண்டு கற்பித்தல் அனுபவத்தைக் கொண்ட இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1 வகுப்பு2:1 வகுப்பு 2:11 ஐச் சேர்ந்த பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன.

- மாதிரி விண்ணப்பப் படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு இரு பிரதிகள் தயாரித்து இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

# பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சனியன்று இலவசக்கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச மாதிரி வினாக்கள் வழங்கலும் அது தொடர்பான விளக்கமளிக்கும் விசேட கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சாயி சமுர்த்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்த கருத்தமர்வு 17 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

இந்தக் கரத்தரங்கில் பொருளியல், கணக்கியல், வர்த்தகம் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தொடர்பான மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டு அவை தொடர்பான விளக்கங்களும் வழங்கப்படும்.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பல்வேறு செயற்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மக்களிடையே டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிமனை மே 16 முதல் 22 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனம் செய்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

இந்த டெங்கு ஒழிப்பு வாரத்தின் போது பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிமனையால் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட வுள்ளன.

ஊடகங்கள் வாயிலாக மக்களிடையே டெங்கு பற்றிய விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்காள்ளல்.

பாடசாலை கிராமம் என பல்வேறு மட்டங்களிலும் டெங்கு பற்றிய கருத்தரங்குகளை நடத்தல்.

தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களில் டெங்கு நுளம்புபரவக் கூடியதால் நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றை அகற்றல். வீடுகளில் உள்ள பூச்சாடிகள் மீன்தொட்டிகள் என்பவற்றை உரிய முறையில் சுத்தமாக பேணுதல்.

பொதுஇடங்களில் உள்ள நீர் தேங்கக்கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றை வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் அமைப்புக்களூடாக அகற்ற நடவடிக்கைகள் எடுத்தல்.

திண்ம கழிவுகளையும் உரிய முறையில் அகற்ற நடவடிக்கை எடுத்தல். குப்பைகள் மற்றும் கழிவுகள் அதிகமாகச் சேரும் இடங்களை இனங்கண்டு அவற்றை அகற்ற விசேட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு வேண்டிய ஆலோசனைகளை சுகாதார வைத்திய அதிகாரிகள் பொதுமக் களுக்கு வழங்குவர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## கல்விக் கண்காட்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கல்லூரி மாணவர்கள் நடாத்தும் மாபெரும் கல்விக்கண்காட்சி இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்தக்கண்காட்சி தொடர்ந்து வெள்ளி, சனி ஆகிய தினங்களும் நடைபெறவுள்ளது.

(29)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்ற நாடகம் பயில புதியபிரிவிற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் மாலை 4 மணிக்கு மன்ற கலைத்தூது மண்டபத்திபத்தில் இடம்பெறவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நாடக பயிலக மாணவர்களுக்கான ஆரம்ப வைபவம் நடைபெறவுள்ளது.

திருமறைக்கலாமன்றத்தால் நாடகத்துறைசார்பாக ஒருவருட கற்கைநெறியாக ஒவ்வொரு சனி ஞர்யிறு தினங்களில் மேற்படி பயிற்சி நெறிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(91)

## சொற்பொழிவும் கலந்துரையாடலும்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடத்தும் சினிமா சொற்பொழிவும் கலந்துரையாடலும் நாளை பிற்பகல் 3 மணிக்கு ஆனந்தகுமாரசாமி மாவத்தையில் மகாவலிநிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நல்லதிரைப்படத்தின் அணுகுமுறை என்ற தலைப்பில் பத்திரிகை எழுத்தாளர் கே.எஸ் சிவகுமாரன் கருத்துரை நிகழ்த்துவார்.

## எழுத்தாக்கப் போட்டியும் ஆக்கத்திறன் வெளிப்பாடும்

நல்லூர் கோட்ட மட்ட தமிழ் மொழித்தின எழுத்தாக்க போட்டிகளும் பிரிவு 1 ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வும் இன்று பி.ப2 மணிக்கு யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நடை பெறும்.

நல்லூர் கோட்டத்தில் தரம் 6-11 வரை சமூகக்கல்வியும் வரலாறும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதனப்போட்டியும் கண்காட்சியும் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நடை பெறும்.

## காணாமற்போனோர் சங்க உறுப்பினர்களுக்கு

வடகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் உறுப்பினர்களில் கணவர் கைதாகி காணமற் போன குடும்பத் தலைவிகளுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் முற்பகல் 11 மணிக்கு இல.16 கச்சேரி கிழக்கு ஒழுங்கை என்ற முகவரியில் நடைபெறவுள்ளதால் அங்கு சமுகம் தருமாறு சங்கத்தின் செயலாளர் திருமதி க.துரைசிங்கம் தெரிவித்துள்ளார்.

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

வண்ணார் பண்ணை வடமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆறுகால் மடம் ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வண்ணார் பண்ணை வடமேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பெண்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

## அறிவித்தல்

### வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் 23.05.2005 திங்கள்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின்போது வியாபார நிலையங்களை அமைக்க விரும்புவோர் 19.05.2005 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய வளவில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். கேள்வி முறையில் நிலம் வழங்கப்படும்.

23.05.2005 திங்கள் பொங்கல் உற்சவத்தன்று வாகனங்கள் எதுவும் உள் அனுமதிக்கப்படமாட்டாது.

தலைவர்
வற்றாப்பளை கண்ணகி
அம்மன் ஆலயம்.

(சி-3655)

### வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் 23.05.2005 திங்கள்

மேற்படி பொங்கல் உற்சவம் தொடர்பான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பின்வரும் சேவைகளை வழங்க தகுதியானவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

01.மின்ஒளி வழங்குவதற்கு 850 ரியூப் பல்ப்புக்கள் தேவைப்படுகின்றன. 200 ரியூப் பல்ப்பிற்கு குறையாமல் பொருத்தக்கூடியவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மின் பிறப்பாக்கி பரிபாலன சபையால் வழங்கப்படும்.

02. 20 ஒலிபெருக்கி இணைப்பு வழங்கக்கூடியவர்களிடமிருந்தும் கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

தகுதியானவர்கள் மேற்படி கூறுவிலைகளுடன் 15.05.2005 ஞாயிறு காலை 10.00 மணிக்கு ஆலயத்திற்கு சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
வற்றாப்பளை கண்ணகி
அம்மன் ஆலயம்.

(சி-3656)

மனோகரா யாழ்ப்பாணம்

சரத்குமார், அறிமுகம் ரமேஷ், பூஜா, கலாபவன் மணி மற்றும் பலர் நடித்த



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும்

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த

பிரியமான தோழி

பு.நே: 10.30, 2.30, 6.30

நாளை முதல்
தனுஷ், ஸ்ரீதேவி
நடித்த

தேவதையைக் கண்டேன்

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்

(C/3979)




50 ஆவது நாளை நோக்கி...

காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00,

## சிவராம் படுகொலை குறித்து

# சுதந்திர விசாரணைக்குழு அமைக்க எரிக் சொல்ஹெய்மிடம் கோரிக்கை!

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பாக சுதந்திர விசாரணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு எல்லைகளற்ற பத்திரிகை ஆணைக்குழு நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடமும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரிடமும் கடிதம் மூலம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பத்திரிகைச் சுதந்திரத்துக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் தொடர்பாகவும், ஊடகவியலாளர் படுகொலை செய்யப்படுவது தொடர்பாகவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு எந்த நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

சண்டைகளற்ற நிலை மாத்திரம் அமைதி என்று அர்த்தப்பட்டுவிடாது. சிவில் சமூகத்தின் சுதந்திரமான பணி, அவர்களின் இயல்புநிலை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதன் மூலமே நிலையான அமைதியை உருவாக்கமுடியும்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர் படுகொலை தொடர்பில் நாம் கண்டுகொண்ட அனுபவங்களின்படி, சிவராம் கொலையாளிகளை அரசு நீதியின் முன் நிறுத்தும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை.

ஆகவே, சுதந்திர விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொண்டு சிவராம் கொலை தொடர்பான சூத்திரதாரியை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர நேரடியாகத் தலையிட்டு ஆவன செய்யுமாறு கடந்த 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் எல்லைகளற்ற பத்திரிகை ஆணைக்குழு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

சிவராம் கொலை தொடர்பாக நோர்வே அரசு, இலங்கையில் அமைதி முயற்சிகளின் அனுசரணையாளர் என்ற வகையில், கண்டனம் தெரிவிக்காமை குறித்து ஆழ்ந்த கவலையடைவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெள்ளவத்தை பகுதியில் பலத்த வீதிச் சோதனை!

வெள்ளவத்தை பகுதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து கடந்த திங்கட்கிழமை மாலை தீவிர வீதிச் சோதனைகளில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கையின் போது வாகனங்களும், சந்தேகத்துக்கிடமாக வீதிகளில் நடமாடுபவர்களும் மறிக்கப்பட்டு கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இது குறித்து வெள்ளவத்தைப் பொலிஸார் கருத்துத் தெரிவிக்கையில் -

இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் கடந்த இரண்டு மாதங்களாகவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இவ்வாறு வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் நடத்தப்படுவதாகவும், கொழும்பின் தென் பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் சட்டவிரோத செயல்கள் மற்றும் ஆயுத பாவனைகள் என்பவற்றைத் தடுக்கும் நோக்கிலேயே இவ்வாறான திடீர் சோதனைகள் நடத்தப்படுவதாகவும் குறிப்பிட்டனர்.

அத்துடன், இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் நாரஹேன்பிட்டி மற்றும் கிருலப்பனை ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டதாகவும் வெள்ளவத்தைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சந்திவெளி தாக்குதல் சம்பவத்துக்கு மனித உரிமை செயலகம் கண்டனம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை - சந்திவெளியில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலை வன்மையாகக் கண்டித்து வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் அமைதியான முறையில் அதிகார பீடத்திற்கு எதிராக வாசக அட்டைகளை ஏந்துதல் எக்கலாத்திலும் மறுக்கப்பட முடியாத அடிப்படை ஜனநாயக உரிமையாகும்.

ஆயுதமற்ற மக்கள் தங்கள் அடக்குமுறை நிலைமையை மாற்றுவதற்காக கையாளக்கூடிய ஒரே மார்க்கம் இதுவாகும். அமைதியான முறையின் ஊடாக பிரச்சினைகளைத் தீ பதற்கு இது முதன்மையான கருவியுமாகும்.

சர்வதேச சமூகத்தின் ஆசீர்வாதத்துடன் வடக்கு - கிழக்கு மக்கள் அடக்குமுறைகளை சமாதான வழியில் தீர்க்கும் நடைமுறைகளை முழுமனதுடனும், நம்பிக்கையுடனும் முன்னெடுக்கின்றனர்.

சர்வதேச சமூகம் ஆதரவு வழங்கும் என்ற நம்பிக்கையுடன், மக்கள் தங்கள் எதிர்பார்ப்பை அமைதியான முறையில் எடுத்துச்சென்று மாற்றங்களைக் கொண்டுவரலாம் என்று நினைத்தனர்.

தமது நாளாந்த வாழ்க்கையில் இராணுவத்தால் ஏற்படுத்தப்படும் தொல்லைகளை கடந்த பல மாதங்களில் மக்கள் அமைதி வழியில் வெளிப்படுத்தி வந்துள்ளனர். இப்படியான காலங்களில் பல தடவைகள் இராணுவத்தின் ஆயுத அடக்குமுறைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

இதேவேளை, 1956 தொடக்கம் இன்று வரையுள்ள வரலாற்றில் எத்தனையோ ஆயுதமற்ற அமைதி வழியிலான மக்களின் ஆட்சேபனைகளை இராணுவம் வன்செயல்கள் மூலம் அடக்குவதை ஓர் ஒழுங்குமுறையாகக் கொண்டுள்ளதை வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

ஆயுதமற்ற நிலையிலுள்ள அப்பாவி மக்கள் 1956, 1961 ஆம் ஆண்டுகளில் தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராகக் காட்டிய ஆட்சேபனைகளை மனிதாபிமானமற்ற அடக்குமுறைகள் மூலம் இராணுவம் தீர்க்க முனைந்தது.

இத்தகைய சமாதான ஊர்வலங்களை நடத்தும் மக்களை மனிதாபிமானமற்ற வகையில் சுட்டுக்கொன்றால் மக்கள் எங்கே போவார்கள் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுக்கட்டமைப்பு குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களின் தூதுவர்களுக்கும், ஜனாதிபதி சந்திரிகாவிற்குமிடையில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், அவுஸ்ரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொண்டனர்.

இதில் எதிர்வரும் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் மற்றும் விடுதலைப் புலிகளுடன் அமைக்கப்படவுள்ள பொதுக் கட்டமைப்பு தொடர்பாகவும் ஜனாதிபதி தூதுவர்களுக்கு எடுத்து விளக்கினார்.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளுடனான பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டுமென இந்தியத் தூதுவரைத் தவிர மற்றைய நாடுகளின் தூதுவர்கள் வலியுறுத்தினர்.

விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டாலும், அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வரும் ஜே.வி.பி - தனது ஆதரவை விலக்க மாட்டாதென ஜனாதிபதி தூதுவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார். (01)

# சித்தாண்டி காவலரண் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி சித்தாண்டியிலுள்ள இராணுவ காவலரண் மீது கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டு வீசப்பட்டதுடன், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் போது இராணுவச் சிப்பாய் ஒருவர் சிறுகாயமடைந்து பொலனறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து அந்த இடத்தில் தேடுதல் மேற்கொண்ட இராணுவத்தினர் - வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தில் இரவு நேரம் கடமையிலிருந்த காவலாளி மற்றும் அங்கிருந்த இரண்டு மாணவர்களையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இந்த மாணவர்களும், காவலாளியும் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# புலிகளின் பொதுக்கட்டமைப்பு முயற்சி தனிநாட்டுக் கோரிக்கைக்கான படிக்கல்

## எதிர்ப்புப் பேரணியில் விமல் வீரவன்ச



நாட்டுக்குத் துரோகமிழைத்த ரணில் விக்கிரமசிங்க அரசிலும் பார்க்க, ஒருபடி மேலே சென்று விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்கு இணங்கி, அவர்களின் தனி நாட்டுப் புரட்சிக்கு துதி பாடப்பார்க்கிறார் ஜனாதிபதி சந்திரிகா என ஜே.வி.பி பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் அரசு செய்துகொள்ளவுள்ள பொதுக்கட்டமைப்பு இணக்கப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் கொழும்பில் ஜே.வி.பியின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் சொத்துகள் வெளிநாடுகளுக்கு விற்கப்படுவதைத் தடுப்பதற்காகவே நாம் ஜனாதிபதியின் கட்சியினருடன் ஒப்பந்தம் செய்துகொண்டோம். அதற்காகவே நாம் தேர்தல் மூலம் மக்களிடம் ஆணையும் வாங்கினோம். இதனை மறந்து இன்று எமது கூட்டணியில் உள்ளவர்கள் செயற்படுகிறார்கள்.

பொதுக்கட்டமைப்பு என்ற பெயரில் விடுதலைப் புலிகள் அக்கறையுடன் அமைக்க முயல்வது அவர்களது தனிநாட்டுக் கோரிக்கைக்கான புதிய படிக்கல். தமிழ் மக்களுக்கு இவ்வளவு காலத்தில் அற்ப சொற்பத்தை மட்டுமே செய்தவர்கள் - இந்தப் பொதுக் கட்டமைப்பு மூலம் அப்படி என்ன நன்மை செய்துவிடப் போகிறார்கள் என்று தெரியவில்லை. தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு சட்டரீதியாக நாடும் நிர்வாக அலகுதான் பொதுக்கட்டமைப்பு முஸ்தீபு.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான மாகாணசபைத் தேர்தலை அரசு உடன் நடத்த வேண்டும். அரசமைப்பில் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் வாழும் இந்தப் பகுதிகளில் ஜனநாயகத்தை நிலைநாட்டவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு தேர்தல் நடத்தாமை அந்தப் பகுதி மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கள்ளநோட்டு அச்சிட்டு வந்த மூவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பாதுக்கையில் 500 ரூபா கள்ள நோட்டு அச்சிட்ட மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டனர்.

பாதுக்கை - கலகெதர எனும் இடத்திலுள்ள வீடொன்றிலேயே இந்தக் கள்ள ரூபா நோட்டு அச்சடிக்கப்பட்டு வந்தது.

கடந்த திங்கட்கிழமை பாதுக்கையிலுள்ள மின் உபகரண விற்பனை நிலையமொன்றிற்கு வந்த ஒருவர் பொருள் ஒன்றை கொள்வனவு செய்த பின் வழங்கிய 500 ரூபா நோட்டை சந்தேகித்த கடை உரிமையாளர் பொலிஸாருக்கு செய்த முறைப்பாட்டையடுத்தே இந்த விவகாரம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

பொலித்தீன் பைகள் தாயாரிக்கும் வீடொன்றிலேயே இந்தக் கள்ள ரூபாநோட்டுக்கள் அச்சடிக்கப்பட்டு வந்தன.

கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணகளை மேற்கொண்ட பொலிஸார் மேலும் இருவரைக் கைதுசெய்தனர். கள்ள ரூபா நோட்டு அச்சிட்ட மூவரும் 30 வயதிற்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட வீட்டை சோதனையிட்ட பாதுக்கைப் பொலிஸார் அந்த வீட்டிலிருந்து 951 ஐந்நூறு ரூபா கள்ள நோட்டுக்கள், கணினி ஒன்று, பிறிண்டர் ஒன்று உட்பட கள்ள ரூபா நோட்டு அச்சிடபயன்படுத்தப்பட்ட பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

# தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை தேவையில்லை

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை முக்கியமானதொன்றல்ல என, பிரதிப் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அடையாள அட்டையை வழங்குவதற்கான புதிய அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்-

தேர்தல் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுவதானது, தேர்தல் காலத்தில் வாக்களிக்கும் நபர் தனது அடையாளத்தை ஏதோவொரு வகையில் நிரூபிப்பதற்காகும். எனினும் விசேடமாக ஒரு தனி ஆவணத்தைத்தான் அவர் வைத்திருக்கவேண்டும் என்பதல்ல.

இதன்படி - அடையாள அட்டை வாக்களிக்கும்போது தேவையில்லை. மாறாக பாஸ்போட் மற்றும் இது போன்ற பிற ஆவணங்கள் மூலமும் வாக்களிப்பவர் தனது அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார். (தே)

# பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணங்கள் வழங்கப்படுவதில்லை என குற்றச்சாட்டு


உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை சரியான முறையில் வழங்குவதில்லையென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையான நிதியுதவி கிடைக்கப்பெறுவதுடன், அவர்களுக்கான நிவாரணப் பொருட்களை உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் கொள்வனவு செய்கின்றபோதும், அதனைச் சரியான முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதில்லையெனவும், வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெறும் நிதியுதவியைக் கொண்டு தையல் இயந்திரங்கள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் பட்குகள் கொள்வனவு செய்யப்படுகின்றபோதிலும், அவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரியமுறையில் கிடைக்கப்பெறுவதில்லையென சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதேவேளை, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் கிண்ணியா பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்கட்டுமானப் பணிகள் - உண்மையாகப் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பிரதேசத்தில் இடம்பெறவில்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மேற்கிந்திய தீவுகள் அணியை டெஸ்ட் தொடரில் வெல்வோம்!

## 48 வருட கனவு நிறைவேறும் என்கிறார் இன்சமாம்



(கராச்சி)

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவோம் என்று பாகிஸ்தான் அணி கப்டன் இன்சமாம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டித் தொடரில் விளையாடவுள்ளது.

பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடையேயான முதல் ஒருநாள் போட்டி சென்.வின்சென்டில் எதிர்வரும் 18 ஆம் திகதியும், சென் லூசியாவில் 2 ஆவது ஒருநாள் போட்டி 21 ஆம் திகதியும், 3 ஆவது ஒருநாள் போட்டி 22 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டி பார்படோஸ்சில் மே 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரையும், 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஜமைக்காவில் ஜூன் 3 ஆம் திகதிமுதல் 7 ஆம் திகதிவரையும் நடைபெறும்.

இந்தப்போட்டி குறித்து பாகிஸ்தான் அணி கப்டன் இன்சமாம் கூறுகையில் -

3 ஆவது முறையாக மேற்கிந்தியத் தீவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறேன். முதல் பயணத்தில் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் அங்கீகாரம் எனக்குக் கிடைத்தது. இந்த 3 ஆவது பயணம் மேற்கிந்தியத் தீவுகளில் அந்த அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்ற முதல் பாகிஸ்தான் கப்டன் என்ற வாய்ப்பையும் தரும் என்று நம்புகிறேன்.

இந்தத் தொடரில் நான் மேலும் சதம் அடிக்க விரும்புகிறேன். இருப்பினும் டெஸ்ட் தொடரை வெல்வது தான் எனது முக்கிய குறிக்கோளாகும். அது பாகிஸ்தான் மக்களின் விருப்பமுமாகும்.

48 ஆண்டுகளாகக் காத்திருக்கும் டெஸ்ட் தொடர் வெற்றிவாய்ப்பு இந்தமுறை நிறைவேற அருமையான சூழ்நிலை இருக்கிறது. அணி வீரர்கள் நல்ல நிலையில் உள்ளனர். இவ்வாறு இன்சமாம் கூறினார்.

1957 - 58 ஆம் ஆண்டுமுதல் பாகிஸ்தான் அணி 6 முறை மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியிருக்கிறது. அதில் ஒருமுறைகூட டெஸ்ட் தொடரை வெல்லவில்லை. 1988 ஆம் ஆண்டில் இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட் போட்டித் தொடரை 1-1 என்ற கணக்கில் சமன்செய்தது. மற்ற எல்லா தொடர்களிலும் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்ட போட்டி

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடன், வலிகாம உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று மாலை 7 மணிக்கு மின்னொளியில் நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழம் மோதவுள்ளது.

இதேவேளை, நடைபெறவுள்ள விசேட காட்சிப்போட்டியில் 40 வயதுக்கும் மேற்பட்டோர் ஆட்டத்தில் பருத்தித்துறை லீக் தெரிவு அணியை எதர்த்து வலிகாம உதைபந்தாட்ட லீக் தெரிவு அணி மோதவுள்ளது.

# மேற்கிந்திய டெஸ்ட் தொடரில் சொகைப் மலிக் பந்துவீசுவார்

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவிப்பு

(கராச்சி)

சொகைப் மலிக்கின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக அவர் பந்துவீசுவார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.


பாகிஸ்தான் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான சொகைப் மலிக்கின் தூஸ்ராமுறை பந்துவீச்சுக் குறித்து கடந்த ஒக்ரோபரில் புகார் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவருக்குப் பந்துவீசத் தடைவிதிக்கப்பட்டது. இதனால் துடுப்பாட்டக்காரராக மட்டும் அவர் களமிறங்கிவந்தார்.

ஆனால், இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரின்போது திடீரெனப் பந்துவீசினார். இப்போது மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடருக்கும் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இவரது பந்துவீச்சுப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகி சலீம் அல்டாப் தெரிவித்தார். இதுபற்றி அவர் கூறுகையில் -

இந்தியத் தொடர் முடிந்ததும் சொகைப் மலிக்கைத் தென்னாபிரிக்காவில் உள்ள விளையாட்டு மையத்துக்கு அனுப்பிவைத்தோம். அங்கு சிறப்பு நிபுணர் ஒருவர் அவரது பந்துவீச்சைக் கண்காணித்தார். ஐ.சி.சி நிர்ணயித்துள்ள அளவுக்குள் (15 டிகிரி) தான் மலிக் கையை வளைப்பதாக அறிக்கை அளித்தார். இதனால் மேற்கிந்தியத் தொடருக்குத் தேர்வு செய்தோம்.

மலிக்கின் பிரச்சினையே தூஸ்ரா தான். இந்தியாவுக்கு எதிரான நான்கு ஒருநாள் போட்டிகளிலும் இந்த வகையில் பந்துவீசவில்லை. சர்வதேச கிரிக்கெட் சபையும் (ஐ.சி.சி.) ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. இது எங்களுக்கு ஊக்கத்தை அளித்தது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் மலிக் பந்துவீசுவார். இவ்வாறு சலீம் அல்டாப் கூறினார்.

இதேவேளை, பந்துவீச வாய்ப்புக் கிடைத்தபோதும் மலிக்கின் மீதான ஒரு டெஸ்ட் தடை நீடிக்கிறது. இதனால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் பங்கேற்க இயலாது. பாகிஸ்தானில் நடந்த 20:20 போட்டியில் தனது அணியை வேண்டுமென்றே மலிக் தோற்கச் செய்தார்.



இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இவருக்கு ஒரு டெஸ்ட் தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

# ஆஷஸ் தொடரில் ஆடுவாரா பிரட்லீ?

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ முகத்தில் வியர்க்குரு பாதிப்பு ஏற்பட இரண்டு நாள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை மேற்கொண்டார். இதனால் ஆஷஸ் தொடரில் அவர் ஆடுவது குறித்து சிக்கல் எழுந்துள்ளது.

பிரட் லீக்கு அதிக வெயில் தாங்காது. இதனால் தோற்பகுதிகளை வெயில் படாமல் பாதுகாத்து வந்தார். ஆனால் இந்தியா - மேற்கு அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டது வினையாக அமைந்துவிட்டது. இதுகுறித்து இவரது மனேஜர் நீல் மாக்ஸ்வெல் கூறுகையில் -

முன் எச்சரிக்கை நடவடிக்கையாகத்தான் பிரட் லீ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இப்போது நலமாக இருக்கிறார். இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரில் நிச்சயமாக இடம்பெறுவார். இதற்கு தோல் பிரச்சினை தடையாக இருக்காது என்றார்.

## விளையாட்டு

# இழந்த நிலையை மீண்டும் அடைவேன்

## இர்பான் பதான் நம்பிக்கை

(வடோதரா)

பாகிஸ்தான் தொடரில் சோபிக்கத் தவறியதற்காகச் சாக்குப்போக்குச் சொல்ல விரும்பவில்லை. உழைப்பை மட்டுமே நம்புகிறேன். கடும் பயிற்சி செய்து இழந்த நிலையை மீண்டும் பெறுவேன் என சபதம் செய்துள்ளார் இர்பான் பதான்.

இந்திய அணியின் இளம் வேகப் பந்துவீச்சாளராக எழுச்சிகண்ட பதான் சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான 3 டெஸ்டில் 6 விக்கெட்டைத் தான் இவர் வீழ்த்தினார். ஒரு நாள் தொடரில் (ஒரு போட்டியில் மட்டுமே வாய்ப்புத் தரப்பட்டது) விக்கெட் எதுவும் வீழ்த்தவில்லை. இவரது மோசமான செயற்பாடு ரசிகர்களுக்கு மிகுந்த அதிர்ச்சியை அளித்தது. இதுகுறித்து வேதனையோடு பதான் கூறுகையில்-

விக்கெட் வீழ்த்தியிருந்தால் என் செயற்பாடு பற்றி யாரும் கேள்வி கேட்டிருக்கமாட்டார்கள். பாகிஸ்தான் தொடரில் அதிர்ஷ்டம் கைகொடுக்கவில்லை. மோசமான நிலை என்பது கிரிக்கெட்டில் சகஜம். இதை ஒரு காரணமாகச் சொல்லி தப்பிக்க விரும்பவில்லை. ஏமாற்றமும் அடையவில்லை.



கடினமாகப் பயிற்சிசெய்து முன்னேற்றம் காணும் முயற்சியில் இறங்கியுள்ளேன். இப்போது 130 முதல் 140 கி.மீ வேகத்தில் பந்துவீசுகிறேன். மீண்டும் எனது பலமான ஸ்விங் பந்துவீச்சில் சாதிப்பேன். ஓகஸ்டில் இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்புத் தொடருக்கு முன்பாக இழந்த நிலையை மீட்டுவிடுவேன். இவ்வாறு பதான் நம்பிக்கையுடன் கூறினார்.

# ஆதிக்கம் முடிந்துவிட்டதாக பத்திரிகைகளில் எழுதாதீர்கள்

## ஷூமேக்கர் கோரிக்கை

ஷூமேக்கரின் ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிட்டது என எழுதாதீர்கள் என மைக்கல் ஷூமேக்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஸ்பெயினில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற 2005 சீசனின் 5 ஆவது போர்முலா -1 போட்டியில் காரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பாதியிலேயே வெளியேறினார் ஷூமேக்கர்.

இதையடுத்து இனிமேல் அவரால் முதலிடத்தை எட்டிப்பிடிக்க முடியாது என்பதை உணர்த்தும் விதமாக ஷூமேக்கரின் போர்முலா -1 கார்ப்பந்தய ஆதிக்கம் முடிவுக்கு வந்தது என பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின.

இதையறிந்த ஷூமேக்கர் அவ்வாறு எழுதாதீர்கள் என தனது வெப்சைட்டில் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனது ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிட்டது என எழுதியவர்களுக்கு எனது திறமையைப் பற்றித் தெரியாது. 2005 சீசன் (பந்தயங்கள்) அதிக பந்தயங்களைக் கொண்டது. இன்னும் நடைபெறவேண்டியவை அதிகம் உள்ளன.

மாற்றங்கள் நிகழவும் அதிக வாய்ப்புள்ளன. என்றாலும் முதலிடத்தை எட்டுவதற்கு கடுமையான போராட்டத்தை நிகழ்த்தவேண்டும். ஆனால் எல்லாம் முடிந்துவிடவில்லை. முதலிடத்தை எட்டுவதற்கேற்ற முயற்சிகளைச் செய்துவருகிறேன். என கூறியுள்ளார் 36 வயதாகும் ஷூமேக்கர்.

# இந்திய அணியின் பயிற்சியாளராக அமர்நாத்துக்கு ஆசையாம்!

(மும்பை)

இந்திய அணியின் பயிற்சியாளராக ஆசைப்படுவதாக மொகிந்தர் அமர்நாத் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளரைத் தேர்வுசெய்ய பரிசீலிக்கப்பட்டுவரும் பெயர்களில் மொகிந்தர் அமர்நாத்தும் அடங்கியுள்ளார்.

மொகிந்தர் அமர்நாத் 1983 ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி உலகக் கோப்பையை வென்றபோது அந்த அணியில் விளையாடிய வீரராவார். அது மட்டுமல்ல அந்தப் போட்டியின் ஆட்ட நாயகனும் ஆவார். அப்படிப்பட்ட மொகிந்தர் அமர்நாத் இப்போது இந்திய அணிக்குப் பயிற்சியாளர் ஆக தன் ஆசையை வெளிப்படுத்தியுள்ளார்.




நான் இந்திய அணி பயிற்சியாளர் ஆவதில் மிகவும் ஆர்வத்துடன் இருக்கிறேன். எனக்கு அந்த வாய்ப்பு கிடைத்தால் மனப்பூர்வமாகப் பாடுபடுவேன் என்று அவர் கூறினார்.

# யாழ்.கல்வி வலய உடற்பயிற்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப்போட்டி நாளை காலை 8.30 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தி. செல்வரட்ணம் தெரிவித்தார்.



இத்தாலியின் ரோம் நகரில் மாஸ்டர் ரெனிஸ் போட்டி நடக்கிறது. இதில் பிரான்ஸின் மேரி பியர்சும், சீனாவின் சுவாய் பெங்கும் மோதினார்கள். அப்போது மேரி பியர்ஸ் ஆக்ரோசமாக விளையாடிய காட்சி. இதில் 6-1, 7-5 என்ற செட் கணக்கில் அவர் வெற்றி பெற்றார்.

# கடற்படையினர் - கடற்தொழிலாளர் இடையே திருவடிநிலையில் முறுகல்

(சுழிபுரம்)

சுழிபுரம் - புளியந்துறை மற்றும் திருவடிநிலைக் கடற்கரைகளில் கடற்படையினருக்கும் -கடற்தொழிலாளருக்குமிடையே கடந்த சில நாட்களாக முறுகல் நிலை தொடர்கின்றது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கடற்கரையில் தமது காவலரண்களுக்கு அருகில் கடற்தொழிலாளர்கள் சைக்கிள்களை நிறுத்தக்கூடாது என கடற்படையினர் உத்தரவிட்டதைத் தொடர்ந்து முறுகல் நிலை ஏற்பட்டது.

இதுவரை காலமும் குறிப்பிட்ட பகுதி கடற்தொழிலாளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வீடுகளில் இருந்து விறகுகள் மற்றும் பனம் பொருட்கள் என்பவற்றை மீனவர்கள் கொண்டுவர படையினர் அனுமதித்தனர். ஆனால் படையினருடனான இப்பிரச்சினையைத் தொடர்ந்து இதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுழிபுரம் அலைமகள் கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் உட்பட கடற்தொழிலாளர்கள் சிலர் விசாரணைக்காக கடற்படை முகாமுக்கு அழைக்கப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

அத்துடன் சில கடற்தொழிலாளர்களின் பாஸ் (அனுமதி) சில நாட்களுக்கு முன்னர் ரத்துச்செய்யுப்பட்டது. இதனால் குறிப்பிட்ட குடும்பங்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளன.

கடந்த மாதமும் கடற்படையினர் குறிப்பிட்ட இந்தக் கடற்கரையில் மணல் அள்ள முற்பட்டபோது, கடற்தொழிலாளருக்கும் - கடற்படையினருக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டு கைகலப்பு நடைபெறும் நிலைவரை சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (207)

# மாணவர் பேரவை ஏற்பாட்டில் இலவச கணினி, ஆங்கில வகுப்பு

சர்வதேச மாணவர் பேரவை - சாவகச்சேரியில் இலவச கணினி மற்றும் ஆங்கில வகுப்புகளை நடத்தவுள்ளது.

இதற்காக சங்கத்தானை - தாமோதரம்பிள்ளை வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இலவச கணினி பயிற்சி நிலையம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

ஆங்கில, கணினி வகுப்புகளுக்கு பதிவுசெய்த மாணவர்கள் நாளை சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்துக்கு வருகைதந்து, தங்களின் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு சர்வதேச மாணவர் பேரவை பொறுப்பாளர் ந.கண்ணன் தெரிவித்தார்.

# பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலைக்கு வசதிகள் செய்து தருமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலைக்கு ஆளணி வசதியையும், தொடர்பாடல் வசதியையும் ஏற்படுத்தித் தருமாறு பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனம் சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலையில் நீண்டகாலமாக ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருவதாகவும், இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

தொலைபேசி வசதியும் இந்த வைத்தியசாலையில் இல்லை. இதனால் அம்புலன்ஸ் வண்டிகளை அழைப்பது, அவசர தேவையின்போது மருத்துவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது என்பன மிகுந்த சிரமங்களை வைத்தியசாலை நிர்வாகத்துக்கும், நோயாளர்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, தாங்கள் தலையீடு செய்து விரைவாக இந்த வைத்தியசாலைக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருமாறு பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனம் சண்டிலிப்பாய் பிரதேச செயலரைக் கேட்டுக்கொண்டுள்ளது. (44)

# திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

வடமராட்சிப் பிரதேசத்தில் இரவு நேர விழிப்புக் குழுக்கள் செயலிழந்ததைத் தொடர்ந்து அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அண்மையில் புலோலிப் பகுதியில் ஆசிரியர் ஒருவரின் வீட்டின் கூரைப் பகுதியில் திருடர்கள் ஏறிய போது, அங்கிருந்தவர்கள் விழித்துக் கொண்டு மின் விளக்குகளைப் போட்ட போது அவர்கள் தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் அதிகரித்துவரும் திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# புற்று நோயாளருக்கு உதவிக் கொடுப்பனவு

யாழ். மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு கொக்குவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் உதவிக் கொடுப்பனவை வழங்கவுள்ளது.

இந்த உதவிக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு - எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது கண் சத்திர சிகிச்சை நிபுணர் குகதாசன் மற்றும் ஆன்மீக சொற்பொழிவாளர் ஆறு திருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்னர்.

யாழ். மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தமது புற்றுநோய் பதிவு அட்டையைக் காண்பித்து, அன்றைய தினம் உதவிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கற்கையை பூர்த்திசெய்தோர் தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து 2002 - 2003 ஆம் ஆண்டுகளில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிகிழமைக்கு முன்பாக யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தங்களது பெறுபேற்று சான்றிதழ்கள், அடையாள அட்டை சகிதம் தவறாது தொடர்புகொள்ளுமாறு உயர்தேசிய கணக்கியல். வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கதலைவர் வி.தயாபரன் கேட்டுள்ளார்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு -

சாந்தினி வேலுப்பிள்ளை, கந்தையா ஞானச்சந்திரன், கனகசபை கோடீஸ்வரன், இராமச்சந்திரா தயாபரன், சிவகெங்கா சிவானந்தன், சோமசுந்தரம் யசோதரன், சோதிநாதன் முகுந்தன், சசிகலா சின்னத்தம்பி, பத்மநாதன் லுரேந்திரன், சிவயோகினி சின்னத்தம்பி, சோமசுந்தரம் சுகிர்தன், ஞானசேகரம் ரூபகரன்.




நல்லூர் றோட்றிக் கழகம் மற்றும் கொழும்பு ஐ.டி.எம் றோட்றிக் கழகம் ஆகியன இணைந்து கோண்டாவிலிலுள்ள மகப்பேற்று மருத்துவமனைக்கு ஒருதொகுதி பிளாஸ்ரர், பன்டேஜ் ஆகியவற்றை வழங்கும் நிகழ்வில் நல்லூர் றோட்றிக் கழகத் தலைவர் ரீ.றமணன், வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் பொருட்களைக் கையளிப்பதை காணலாம். (111)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை எட்டு




பெயர் : ஜெ.தனுசிகா
முகவரி : வட்டக்கச்சி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# புதுவையின் கவிதை நூல் பல்கலைக்கழகத்தில் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" எனும் கவிதைத் தொகுப்பு எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கில் வெளியிடப்படவுள்ளது.

தடித்த அட்டைக் கட்டுடன் அழகுற வடிவமைக்கப்பட்ட இந்தக் கவிதைத் தொகுப்பை தமிழக ஓவியர் ட்ரொட்ஸ்கி மருதுவின் ஓவியங்களும், தாயக புகைப்படக் கலைஞர் அமரதாசின் ஒளிப்படங்களும் சேர்ந்து மேலும் கலைநேர்த்தி செய்துள்ளன. 432 பக்கங்களில் நங்கூரம் வெளியீடாக இந்த நூல் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறந்த விவசாயிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விவசாயிகளில் புதிய பயிரினங்களை உற்பத்தி செய்து அதிக விளைச்சலைப் பெற்றவர்கள், புதிய இனங்களைக் கண்டுபிடித்த விவசாயிகள் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளதாக கீரிமலை கமநல கேந்திர நிலைய விவசாய போதனாசிரியர் திருமதி ப.மணிவர்ணன் தெரிவித்தார்.

இவ்வாறு சிறந்த விவசாயிகளின் விபரங்களை உடனடியாக தன்னிடம் தந்துதவுமாறு விவசாய சம்மேளனங்களை கேட்டுள்ளதுடன், தேவையான விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (44)

## சின்னஞ்சிறு செய்திகள்

### நெருப்புக் காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மத்தியில் பரவிய நெருப்புக்காய்ச்சல் - கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

போதனா வைத்தியசாலை பாலியல் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர் கு.நக்கீரன் மேற்கொண்ட உடனடி நடவடிக்கையை அடுத்து நோய்த்தொற்று அபாயம் தற்போது நீங்கியுள்ளது.

இதேவேளை, வைத்தியசாலை குடிநீர் மாதிரி பெறப்பட்டு தொற்றுக்கான காரணம் அறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (111)

### பொங்கல் விழா

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு சந்திரபுரம் அருள்மிகு மகா முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா - எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெறும். தொடர்ந்து மணவாளக்கோல சங்காபிஷேகம் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். அன்றுமாலை விசேட உற்சவம் இடம்பெறும். (24)

### விற்பனை நிலையம் திறப்பு

வட்டுக்கோட்டையில் கால்நடைகளுக்கான உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்கான விற்பனைநிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தத் திறப்புவிழா வைபவத்தை வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத் தலைவர் முன்னின்று வழிநடத்தினார். (207)

### வருடாந்த மஹோற்சவம்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு - சந்திரபுரம் முத்து மாரியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

21 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 22 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 23 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

மஹோற்சவக் கிரியைகள் யாவும் வேதவித்தியாபூஷணம் பிரம்மஸ்ரீ பாலமுரளிதரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். விழாக்காலங்களில் 10 தினங்களும் இரவு 8 மணிதொடக்கம் 'தேவியின் பெருமை' என்னும் பொருள் பற்றி சைவப்புலவர் சி.கா. கமலநாதன் ஆசிரியர் தெய்வீக சொற்பொழிவாற்றுவார்.

☆ ☆ ☆

(தொல்புரம்)

தொல்புரம் கொட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும், இடம்பெறும். தினமும் காலை 9 மணிக்கு காலைத் திருவிழாவும், மாலை 6 மணிக்கு இரவுத் திருவிழாவும் ஆரம்பமாகும்.

மஹோற்சவத்தின் விசேட நிகழ்வாக யாழ். போதனா வைத்தியசாலை மேற்பார்வையாளர் குமாரவேலு கைலாயபிள்ளையின் "முக்கன்னியரைத் தொழுதார்க்கு துன்பம் எதுவும் இல்லை" எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (207)

# செஞ்சிலுவைச் சங்கத்தின் 10 பிரிவுகளின் பதிவு ரத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.மாவட்ட கிளையின் பிரிவுகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 10 அலகுகளின் பதிவை கொழும்பு தேசிய தலைமையகம் ரத்துச் செய்துள்ளது. யாழ்.மாவட்ட கிளையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரிவின் அலகுகளையே தலைமையகம் ரத்துச்செய்துள்ளது.

மருதங்கேணி - 1, வேலணை - 3, உடுவில் - 1, சங்கானை - 1, தெல்லிப்பளை - 1, கோப்பாய் - 1, சண்டிலிப்பாய் - 2 ஆகிய அலகுகளையே தலைமையகம் நிராகரித்துள்ளது. சங்க மாவட்ட நிர்வாகத் தெரிவுக்கான தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில் இந்தச் செயற்பாடு திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எனப் பாதிக்கப்பட்ட அலகுகளின் தலைவர்கள் தெரிவித்தனர். (111)




# உலக சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்வும் அதன் தாக்கங்களும்

பெற்றோலியப் பிரச்சினையானது - இன்றும் எம் முன்னே பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஏனெனில் சில மாதங்களுக்கு முன்னர் பரவலாக எதிர்நோக்கிய பெற்றோலியப் பிரச்சினையின் தொடர்ச்சியாக தற்போது பெற்றோலியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

என்றும் இல்லாத அதிகரிப்பாகவே இந்த அதிகரிப்புக் காணப்படுகிறது. இதன் மூலம் புதிய விலை உயர்வுச் சாதனையை மசகு எண்ணெய் பரல் ஒன்று எட்டியுள்ளது. இது கிட்டத்தட்ட 56 அமெரிக்க டொலராகப் பதியப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பானது ஈராக் நாட்டின் மீது அமெரிக்கப் படைகள் மேற்கொண்ட யுத்தத்தால் உயரும் என எதிர்பாத்ததையும் விட, உயர்வாகவே காணப்படுகிறது.

ஈராக்கின் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தமானது எதிர்பார்த்ததைவிட, விரைவாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டமையால் இந்த விலை உயர்வு தடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், தற்போது ஈராக்கில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் - அங்கு எண்ணெய் உற்பத்திக்கு பாரிய சவாலாகக் காணப்படுகின்றமை யதார்த்தமாகும். இதனாலும் விலை அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

ஈராக்கில் அமைதி ஏற்படுமாயின் ஈராக்கிய அரசு தனது உற்பத்தியின் அளவை அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெலில், பல எண்ணெய் வளம்மிக்க நாடுகள் தமது எண்ணெய் உற்பத்தியின் அளவை அதிகரிக்க எண்ணியுள்ளன.

இதேவேளை இந்த விலை ஏற்றத்துக்கு இந்தியா மற்றும் சீனா நாடுகளின் நுகர்ச்சி அதிகரித்தமையும் ஒரு காரணம் ஆகும். அதாவது சீனா, இந்தியா போன்ற ஆசிய நாடுகளின் நவீன தொழில்நுட்பம் நோக்கிய வளர்ச்சியும் சீனமக்களிடையே தற்போது மேற்கத்தைய பாணியைத் தொடர வேண்டும் என்ற விருப்பமானது - நடை, உடை பாவனைகளில் அதீத விருப்பமாற்றத்தை ஏற்படுத்தியிருக் கின்றமையும் இந்த நாடுகளின் வியாபார செயற்பாடுகளின் வளர்ச்சி காரணமாக நகர மக்களின் வருமானம் உயர்வடைந்திருப்பதுடன் - போக்குவரத்து சாதனங்கள் தற்போது குறைந்த விலைகளில் கிடைக்கக் கூடியதாகவுள்ளது.

உதாரணமாக - மோட்டார் சைக்கிள், கார்கள் போன்றவை நடுத்தர வாழ்க்கை மக்களைக் கவரும் வகையில், குறைந்த விலையில் மற்றும் இலகு கட்டண முறை மூலம் பெறத் தூண்டுகின்றமையும், இரண்டு நாடுகளிலும் போக்குவரத்துப் பிரச்சினை காணப்படுவதும் மக்கள் இவற்றைப் பெற்றுக் கொள்ளத் தூண்டப்படுகின்றனர். இதனால் போக்குவரத்துச் சாதனங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

இவ்வாறு சீனா மற்றும் இந்தியா போன்ற எரிபொருளை அதிகமாகப் பயன்படுத்தும் தேவை இல்லாவிடினும், எல்லா நாடுகளிலும் எரிபொருள்பாவனை அதிகரித்தே காணப்படுகின்றது என்பதில் சந்தேகமில்லை.


எரிபொருள் எண்ணெய் அதிகரிப்புக்கு மற்றும் ஒரு காரணமாக - எரிபொருள் எண்ணெய் தயாரிப்பு நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள தொழிற்சங்கப் போராட்டம், பாதுகாப்புப் பிரச்சினையால் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடங்கல் போன்றவற்றைக் கூறலாம். இவை உலக சந்தையில் எண்ணெய் விலை உயர்வதற்கான காரணங்களாக இருந்த போதும், உலக நாடுகள் பல திட்டங்களைத் தீட்டி, விலையைத் தீர்மானிக்கின்றன. இதற்கு உதாரணமாக பின்வருவனவற்றைச் சொல்லலாம்.

இந்திய அரசால் ஒரு குழு அமைக்கப்பட்டு, அது வாராந்த எண்ணெய் விலை மட்டத்தைக் கொண்டு எண்ணெய் விலையைத் தீர்மானித்துக் கொள்ளும். அதேபோல் இலங்கை அரசு பெற்றோலிய விலை உயர்வைச் சமாளிக்க மாற்று வழியாக பெற்றோலியப் பொருட்களின் விலையை உயர்த்தி இருந்தது. ஆனால், தற்[illegible]தைய விலை உயர்வானது - எப்படி பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறுவது சந்தேகமாகவே காணப்படுகிறது.

இந்த விலை அதிகரிப்பானது தொடர்ச்சியாக அதிகரிக்கும் போக்கைக் காட்டுமேயானால் அல்லது இந்த விலை மட்டமே தொடர்ந்தும் உலக சந்தையில் நிலவுமானால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாற்று வழியாக விலை உயர்வை ஏற்டுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஏனெனில், கடந்த கால விலை உயர்வின் பின் டிசம்பர் மாதம் நியூயோர்க் சந்தையில் - பரல் ஒன்றின் விலை 39.57 அமெரிக்க டொலராக ஒரு சரிவுநிலையைக் காட்டியது. உலக நாடுகளும் தமது எண்ணெய் விலையைக் குறைத்தன.

ஆனால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது - இந்த விலைக் குறைப்பை அனுமதிக்காது,



தொடர்ச்சியாக அந்த உயர் மட்ட விலையையே பேணியது. இதனால் மக்கள் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டனர். இதனை இலங்கை அரசும், பெற்றோலியக் கூட்டுத் தாபனமும் ஏற்றுக்கொண்ட போதும் - விலைக் குறைப்பை நடைமுறைப்படுத்த பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மறுத்தது.

இதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பல வருடமாக நட்டத்திலேயே இயங்கி வருகிறது. இதனால் இந்த நட்டத்தை ஈடு செய்ய இந்த இலாபம் பயன்படுத்தப்படும் எனக் காரணமாகக் கூறப்பட்டது. இந்த நடைமுறையானது - பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை மேலும் பாதிப்பதாக இருந்தது. ஏனெனில் யுத்த நிலை காணப்பட்டபோது தடுக்கப்பட்ட எண்ணெய் வகை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவு எண்ணெயால் உயர் விலைக்கே எண்ணெயைப் பெற முடிந்தது. உதாரணமாக - 1999 -2000 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மண்ணெண்ணெயின் விலை 150 ரூபாவாகக் காணப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மேலும் பாதிப்படைந்து கொண்டு இருக்கின்றார்கள்.

ஆனால் இந்த விலை உயர்வானது மொத்தப் பொருளாதாரத்தையும் பாதித்து, மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் என்பதில் ஐயமேயில்லை. ஏனெனில் பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்வானது போக்குவரத்துக் கட்டணத்தை உயர்த்தப் போகின்றது.

இதனால் பொருட்களின் விலை உயர்வடையும். தனியார் வருவாய் பாதிக்கப்படும். இந்தக் காரணங்களால் தனியார் வருவாயை உயர்த்த முயலுவர். இதனால் பொருட்களின் விலையானது மேலும் உயர்வடையும்.

மேலும் இலங்கை அரசு மானியம் வழங்கி, பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்வைத் தடுப்பதும் சாத்தியமில்லை. எனவே மாற்றுச் சக்தி உற்பத்தி பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாயம் சமுதாய ரீதியிலான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என்பதே உண்மையாகும்.

ஆகவே மேற்கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்துப் பார்ப்போமானால் -பெற்றோலியப் பொருள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு வளமாக இருப்பதையும், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதையும் நாம் காணலாம். எனவே இதனை நோக்கும்போது மாற்று வளப்பயன்பாடானது அவசியமான ஒன்றாகவே காணப்படுகிறது.

நீர், காற்று, சூரிய ஒளி போன்றவை மூலமும் நாம் மின்சார சக்தியைப் பெறமுடியும். எனவே இவ்வாறான கண்டுபிடிப்புகள் எரிபொருளான பெற்றோலியப் பொருள் உற்பத்தியைக் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

- மூன்றாவது கண்

# நோய்களைத் தடுக்கக்கூடிய ஆற்றல் தயிருக்கு உண்டு

சசி சந்திரகாசன்

உணவுடன் சேர்த்தோ அல்லது தனித்தோ தயிர் உண்பது பலபேரின் விருப்பமாகும். இந்தத் தயிர் எமது முன்னோர்கள் ஆரோக்கியமாக பலகாலம் வாழ்ந்ததற்கு முக்கிய காரணம் என பல ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.


சோவியத் ரஷ்யாவில் 250 வகையான தயிர் உற்பத்திகள் இருப்பதாக அறிய முடிகிறது. 'கபீர்' என்றழைக்கப்படும் புளிப்புத்தன்மையான தயிர் வகை அங்குள்ள மக்களின் நாளாந்த உணவின் ஒரு பகுதியாகும். மேலும் இங்குள்ள வைத்தியசாலைகளில் இந்தத் தயிர் வழங்கப்படுகிறது. நியூமோனியா, தடிமன் போன்ற நோய்களுக்கு இந்தத் தயிர் வகை சிறந்த நிவாரணியாக விளங்குகிறது. மேலும் பல நோய்களைத் தடுக்கக்கூடிய ஆற்றல் தயிருக்கு உண்டு. இதனைத் தயிராகவும்,யோகட் ஆகவும் உட்கொள்ள முடியும். தினம்தோறும் உணவோடு தயிரைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் உடலின் பலத்தை அதிகரிக்கலாம். எனவே நாம் தயிர் பாவனையை அதிகரித்துக்கொள்ள வேண்டும். இதற்காக வெவ்வேறு உணவுச் சுவைகளை விரும்பும் மக்களுக்கு ஏற்ற விதத்தில் தயாரிப்பதற்கு தயிர் உற்பத்தியாளர்கள் முன்வரவேண்டும். சுயதொழில் முயற்சியாகவும் இதனை மேற்கொள்ள முடியும்.

♦♦

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 50/= | 60/= | 50/= | 40/= | 40/= | 60/= |
| வெண்டிக்காய் | 15/= | 30/= | 40/= | 30/= | 20/= | 20/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 70/= | 70/= | 90/= | 90/= | 90/= | 80/= |
| கத்தரிக்காய் | 50/= | 40/= | 60/= | 50/= | 50/= | 50/= | 60/= |
| பாகற்காய் | 100/= | 80/= | 80/= | 80/= | 80/= | 80/= | 60/= |
| கரட் | 40/= | 70/= | 80/= | 50/= | 30/= | 50/= | 60/= |
| பீற்றூட் | 25/= | 40/= | 50/= | 30/= | 30/= | 40/= | 50/= |
| முருங்கைக்காய் | 110/= | 100/= | 100/= | 120/= | 100/= | 160/= | 70/= |
| வெங்காயம் | 50/= | 45/= | 50/= | 50/= | 50/= | 50/= | 50/= |
| பச்சை மிளகாய் | 30/= | 40/= | 50/= | 30/= | 40/= | 60/= | 40/= |

## தொழில்மலர்




# பாதணி உற்பத்தியில் வதிரிக் கிராமத்துக்கு நீண்டகால வரலாறு உண்டு...

**பாதணி நுகர்வோர் தொகை சர்வதேச சந்தையில் உயர்ந்துள்ள இந்த வேளையில், அதன் உற்பத்தியை நவீன மயப்படுத்தி, கிராமிய மட்டத்திலுள்ள துறைசார்ந்த தொழில்வல்லுநர்களையும், இளைஞர்களையும் இணைத்து விரிவுபடுத்தி, பொருளாதாரத் துறையில் வளர்ச்சிகாண்பதே பாதணி உற்பத்திப் பயிற்சியின் நோக்கமாகும்.**

**இந்தப் பயிற்சியானது குடிசைக் கைத்தொழிலை மேலும் மேலும் வலுவுள்ளதாகவும், திறனுள்ளதாகவும் ஆக்குமேயன்றி அதனை ஒருபோதும் அழிக்காது.**

காலத்தின் தேவைகளையொட்டி, மாறுபாடடையும் பொருளாதாரக் கொள்கைகள் - நவீனமயப்படுத்தலினூடாக முன்னோக்கிச் செல்கின்றன. ஒவ்வொரு நாடும் தமது உற்பத்தி விற்பனைப் பொருட்களை சர்வதேச தரத்துக்கேற்ப சந்தைப்படுத்தலினூடாகவே பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்கின்றன.

இதற்கு விதிவிலக்காக எந்தவொரு நாடோ, தேசமோ விலகிச் செல்லமுடியாது.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு இது பெரும் சவாலாக விடுக்கப்படுகிறது. இதை உணர்ந்துகொண்டு, சிறிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மூன்றாண்டுத் திட்டத்தில் 1000 கைத்தொழில் கிராமங்களை



உருவாக்கல் என்றவகையில் - தென் பகுதியில் பலகிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு, பலதரப்பட்ட தொழில் பயிற்சிகளை அங்குள்ள மக்களுக்கு வழங்கி வருகிறது.

இந்தத் திட்டத்துக்கமைவாக - யாழ். குடாநாட்டில் கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வதிரி என்னும் கிராமம் பாதணி உற்பத்திக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டு, தற்போது அந்தப் பகுதி இளைஞர், யுவதிகளுக்கு பாதணி உற்பத்திப் பயிற்சியும், பெண்களுக்கான (Hand Bag) கைப்பை செய்யும் பயிற்சியும் வழங்கப் பட்டு வருகிறது.

இதுபற்றி இங்கு பயிற்சியளிப்பதற்காக தென்னிலங்கையிலிருந்து பயிற்றுவிப்பாளர், பயிற்சிக்கான இயந்திர உபகரணங்கள் சகிதம் வந்துள்ள பாதணி உற்பத்திக் கூட் டுறவுத்தாபனப் பணிப்பாளர் P.S.கருணதாஸவுடன் நடத்திய நேர்காணலூடாகப் பெறப்பட்ட கருத்துரைகளை தொழில்மலரினூடாக வாசகர் முன் சமர்ப்பிக்கிறோம்.

**இந்தப் பயிற்சி பற்றிய நோக்கம் பற்றி விளக்கிக் கூறுங்கள்?**

இலங்கைத் தீவில் எந்த மூலையில் வாழும் இளைஞர் - யுவதிகளும் சரி ஏதாவதொரு தொழில் பயிற்சிபெற்றிருக்க வேண்டுமென்பது முக்கிய நோக்கம்.

கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினரான நாம் - 1000 கிராமங்களில் மூன்றாண்டுகாலப் பகுதிக்குள் 300 இக்கும் மேற்பட்ட தொழில் பயிற்சிகளை அளிக்க எண்ணியுள்ளோம். இந்த ஆண்டு முதற்கட்டமாக 200 கிராமங்களைத் தெரிவு தெரிவுசெய்துள்ளோம்.

இதில் ஒன்று வதிரிக் கிராமமாகும். இங்கு பாதணி உற்பத்திப் பயிற்சியளிப்பதே முக்கிய நோக்கமாகும். சர்வதேச சந்தையில் பாதணிகளுக்கு அதிலும் இலங்கை உற்பத்திக்குப் பெரும் மதிப்புண்டு.

நாம் அளிக்கும் நவீனமுறையான பயிற்சியினூடாக இந்தத் தொழிலில் மேலும் முன்னேற்றம் உண்டாகும். கிராமத்து மக்களின் வருவாய் பெருகும். அதனால் நாட்டினது பொருளாதாரமும் உயர்வடையும். மேலும் தொழில் பயிற்சியையூட்டி, வருவாய் பெறக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவதன்மூலம் இளைஞர்கள் தவறான வழிகளில் செல்வதையும் தடுக்க முடியும்.

**பாதணிப் பயிற்சிக்கு வதிரிக் கிராமத்தைத் தெரிவு செய்ததன் காரணமென்ன?**

பாதணி உற்பத்தியில் வதிரிக் கிராமத்துக்கு நீண்டகால வரலாறு உண்டென்பதை நான் அறிந்திருந்தேன். குடிசைக் கைத்தொழிலாக பாதணி உற்பத்தியில் தனியான ஒரு இடத்தை இலங்கையில் இவர்கள் ஏற்படுத்தியிருந்தனர்.

குடிசைக் கைத்தொழிலாக சிறந்த தயாரிப்பாளர்களைக் கொண்ட கிராமத்தில் - நவீன முறைகளையும், புதிய இயந்திர உபகரணங்களையும் கையாளுவதனூடாக சிறந்த பலாபலனை அடைய முடியுமென உணர்ந்தேன். ஆயினும் - சிலரது குடிசைக் கைத்தொழில் பாதிக்கப்படும், மனிதவலு குறைக்கப்படும் என அச்சம் கொள்கிறார்கள்.

மனிதவலுவும், இயந்திரவலுவும் இணையும்போது வேலை இலகுபடுத்தப்படும். உற்பத்தி அதிகரிக்கும். நவீன யுக்திகள் கையாளப்படும். பொருட்களின் தரமும் உயர்ந்து காணப்படும். சர்வதேச சந்தையில் பாதணி கொள்வனவுக்கு, உற்பத்தி போதாமை என்ற உண்மையை இவர்கள் உணரவேண்டும்.

**இரண்டுவாரப் பயிற்சியின் பின் மேற்கொள்ளப்படவிருக்கும் தங்களின் திட்டங்கள் எவை?**

எமது திட்டம் பயிற்சியை மட்டும் கொண்டதில்லை. பாதணி உற்பத்திப் பயிற்சிக்கும், உற்பத்திக்கும், சந்தைப்படுத்தலுக்கும், தொழில் வாய்ப்புகளைத் தொடர்ந்து அளிப்பதற்கும், கிராமத்தின் முன்னேற்றகரமான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதற்குமான ஒருமத்திய நிலையத்தை வதிரியில் உருவாக்கல்.

இதற்காக -

1. நவீன மயமான ரூபா 20 லட்சம் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் வழங்கல்.

2. மத்திய நிலையத்துக்கான கட்டடத்துக்கு ரூபா 40 லட்சம் வழங்கல்.

3. சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்று அமைத்தல்.

4. சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கான பொறுப்பாளர் ஒருவருக்கு பயிற்சியும், வேலையும் வழங்கல்.

5. விளையாட்டு மைதானம் சிறுவர் பாவனைக்கு அமைத்துக் கொடுத்தல் போன்ற கிராமமுன்னேற்றத் திட்டங்களையும் எமது கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது.

**பயிற்சியாளர்களுக்கு இதைவிட மேலதிக பயிற்சிகள் வழங்குவதற்கான திட்டங்களுமுண்டா?**

இரண்டுவாரப் பயிற்சி என்பது அவர்களுக்கான அடிப்படைப் பயிற்சி. இந்தப் பயிற்சியூடாக ஒருவர் சாதாரண தொழிலாளியாகப் பாதணித் தொழிலில் தன்னை ஈடுபடுத்தமுடியும். ஆனால், காலத்துக்குக் காலம் 20 - 25 பேருக்கு திறமையடிப்படையில் உயர்பயிற்சி பெறுவதற்காக கொழும்பில் 3 மாதங்கள் சகல வசதிகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்.

இவர்கள் ஏனையோருக்குப் பயிற்றுவிப்பாளர்களாக நியமிக்கப்படுவர். வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் ஒவ்வொருவரினதும் திறமையடிப்படையில் வழங்கப்படும்.

**குடிசைத் தொழிலாக தற்போது பாதணி உற்பத்தி செய்துவருவோருக்கு இதனால் பெறப்படும் நன்மைகள் எவை?**

கடந்தகாலங்களில் இடைத்தரகர்களூடாக உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ததில் ஏற்பட்ட இழப்புகளையும், பாதிப்புகளையும் இவர்கள் மறந்துவிடமாட்டார்கள் என்றே நம்புகிறேன். நாம் அமைக்கப்படும் மத்திய நிலையம் எவ்வாறு இயங்குமென்பதைத் தெரிந்துகொண்டால், அதனால் ஏற்படப்போகும் பாரிய நன்மைகளை அவர்கள் நிச்சயம் அறிந்துகொள்வர்.

அமைப்பு :-

1. மத்திய நிலையத்தில் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் சகலரும் உறுப்பினர்கள்.

2. மத்திய நிலைய உறுப்பினர்களிடமிருந்து பொறுப்பான நிர்வாகம் தெரிவுசெய்யப்படும்.

3. பாதணி உற்பத்திக்கான மூலப் பொருட் களை வரிவிலக்கோடு மத்திய நிலையம் கொள்வனவு செய்யும்.

4. அதேபோல் இயந்திர உபகரணங்களையும் கொள்வனவு செய்யும்.

5. கூட்டுத்தாபனம் கொள்வனவுக்கான கடன் வசதிகள் செய்து கொடுக்கும்.

6. அதேபோல் குடிசைக்கைத் தொழில் தொழில் அதிபர்களும் வரிச் சலுகை, கடன் வசதி முதலியவற்றை மத்திய நிலையத்துக்கூடாகப் பெறும் வசதியுண்டு.

7. சந்தைப்படுத்தலில் இடைத் தரகர் முறை இல்லாதொழிக்கப்படும்.

8. கூட்டுத்தாபனம் நேரடியாகவே உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்யும்.

9. இந்தப் பயிற்சித் தேவைகருதி தூர இடங்களுக்கும் அங்கு வைத்து வழங்கப்படும்.

10. சகலதும் மத்திய நிலையத்தினூடாகவே செயற்படுத்தப்படும்.

**பெண்களுக்கான பயிற்சியாக வழங்கப்படும் தொழிற் பயிற்சி என்ன?**

பெண்களுக்கான பயிற்சியாக (Hand Bag) கைப்பை செய்யும் பயிற்சி அளித்துவருகிறோம். இந்தப் பயிற்சிக்கு பெண்கள் மிகக் குறைவாகவே பங்குபற்றுகிறார்கள். இவர்கள் ஆர்வமுள்ளவர்களாக இருப்பின், வேறு தொழில் பயிற்சிகளும் வழங்க முடியும்.

கழிவுப் பொருட்களிலிருந்து (பாதணி உற்பத்தி மீதிப் பொருட்கள்) எத்தனையோ சிறிய பொருட்கள் செய்யமுடியும்.

உதாரணமாக - மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் அணியும் கையுறைகள் கழிவாக மீதப்படுத்தப்படும் தோலிலிருந்து செய்யப்படுகிறது. இவற்றுக்கு ஏற்படும் உற்பத்திச் செலவு மிகக் குறைவு. கையடக்க சிறிய Bag மணி பேர்ஸ் போன்ற பல பொருட்களைச் செய்துகொள்ளலாம்.

இந்தப் பயிற்சி நிலையம் சிறப்பாக இயங்குவதைக் காணமுடிகிறது. பயிற்சியாளர்களால் செய்து முடிக்கப்பட்ட பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. நவீன இயந்திரங்களின் துணைகொண்டு பொருட்களை அழகாக ஆக்கமுடியுமெனப் பயிற்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பயிற்சியானது, கரவெட்டி பிரதேச செயலகம், யா/கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், யா/கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகிறது.

(தொடரும்...)

**நேர்காணல்**
**எஸ்.ஜே.என்.**

# ஜனநாயகத்துக்கு எதிரான அரசின் படுகொலையை தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டித்து அறிக்கை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினரால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வயோதிபர் படுகொலை செய்யப்பட்டதற்கும், பலர் படுகாயங்களுக்குள்ளானதுமான மிருகத்தனமான செயலை வன்மையாகக் கண்டிப்பதாக கிளிநொச்சி மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதான செயல்முறைகளில் அபார நம்பிக்கை கொண்டு, புரிந்துணர்வு சமாதானத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அமைதிக் காலத்தைச் சிதறடிக்கும் அரசின் தொடர் முயற்சிகளின் உச்சமானதும், மோசமானதும் இதுவாகும்.

தமிழர் கல்வி வளங்களை தரப்படுத்தல் காலம் தொடக்கம் இற்றைவரை ஆட்சியாளர்கள் ஒடுக்குமுறைக்குள்ளாக்கி வருவது வெளிப்படையானதாகும். தமிழ் பேசும் சமூகத்தின் உயிர்நாடியாகத் திகழும் கல்வித்துறை மீதும், மாணவர் சமூகம் மீதும் இன்றும் அரசு மேற்கொண்டு வரும் வன்முறைகளை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும் என மாணவர் சமூகம் எதிர்பார்க்கிறது.

அரசினாலும், அரச ஆதரவு பயங்கரவாதிகளாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் மனித நாகரிகத்திற்குப் புறம்பானதும் ஆத்திரத்தையூட்டி சமாதானச் செயல்முறையை சாகடிக்கக் கூடியதுமான இந்தச் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

இதற்கு சர்வதேச அரசுகளும் இராஜதந்திரிகளும் புத்திஜீவிகளும் உலக மானிட தர்மத்தின் சார்பாக குரல் கொடுக்க வேண்டும். அத்துடன் அரசை இத்தகைய வன்முறைகளில் ஈடுபடவிடாது தடுப்பதுடன் சமாதான சகவாழ்வுக்கான ஊக்குவிப்பையும் சர்வதேச வன்முறைகளுக்குட்பட்ட இராஜதந்திர தார்மீக அழுத்தங்களை அரசு மீது பிரயோகிக்குமாறு வேண்டுகிறோம்.

மேற்குறித்த மாணவர் சமூகத்தின் உள்ளகக் கருத்துக்களைப் புறந்தள்ளி, அரசு செயற்படுமாயின் உலகின் பல்வேறு புரட்சிகளின் ஊற்றுக்கான மாணவர் சமூகத்தின் அங்கம் என்ற வகையில் தமிழ் பேசும் மாணவர்களும் அரசுக்கெதிரானதும் அடக்குமுறைகளுக்கு எதிரானதுமான அறப்போராட்ட செயல்முறைகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் சுட்டிக்காட்டுகின்றோம்.

எனவே இந்த மனு தொடர்பாக தங்களின் உயர் கரிசனையை எதிர்பார்க்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லெப்டினன்ட் கேணல் கௌசல்யனின் நினைவாக மருத்துவப் பிரிவினரால் நடமாடும் மருத்துவசேவை

விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரால் லெப்டினன்ட் கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட் டது.

நவீன இலத்திரனியல் மருத்துவ ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய இந்த நடமாடும் முதலாவது சேவை வேரவிலில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை வைத்திய கலாநிதி ஓவியன் ஏற்றிவைத்தார்.

இந்த முதலாவது நடமாடும் சேவையில் வேரவில், வலைப்பாடு பொன்னாவழி, பாலாவில், கிரிக்குடா, கிராஞ்சி, பிருந்தாவனம் ஆகிய கிராம மக்களின் நல்வாழ்வை மேம்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தச் சேவையின் ஊடாக பொது மருத்துவம், பல் மருத்து வம், சத்திர சிகிச்சை, கிளினிக் மருத்துவ ஆய்வுகூடசேவை, பெண் நோயியல், மகப்பேற்று மருத்துவம், குழந்தை நல மருத்துவம், கண் மருத்துவம் போன்றவற்றை மக்கள் பெற முடியும் என மருத்துவப் பிரிவின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

தமிழர் தாயகத்திலுள்ள பின் தங்கிய பிரதேச மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற தமிழீழத் தேசியத் தலைவரின் பணிப்புரைக்கு அமை யவே இந்த நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவை மாதாந்தம் பின் தங்கிய பிரதேசங்களிலும், நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தச் சேவையில் 15 இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளின் மருத்துவர்களும், நூற்றுக்கணக்கான மருத்துவப் போராளிகளும் ஈடுபட்டு வருகின்றனர்.



# முல்லை. மாவட்ட உடற்பயிற்சிப் போட்டியில் இரு பாடசாலைகள் மாகாணமட்டத்திற்கு!

முல்லைத்தீவு மாவட்டத்தின் வலயங்களுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக்குழுச் செயலாளர் மைக்கல் தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த உடற்பயிற்சிப் போட்டி ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் முதலாம் இடம் பெற்ற பிரிவுகள் மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் பெண்கள் பிரிவில் ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயமும், ஆண்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையும் தெரிவாகியுள்ளன.

மூன்றாம் இடத்தை ஆண்கள் பிரிவில் பாலிநகர் பாடசாலையும், பெண்கள் பிரிவில் இடதுகரை பாடசாலயும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

(ஸ்ரீ)

# ஆவணங்கள் வழங்குவதற்கான நடமாடும் சேவை முல்லைத்தீவில்

(முல்லைத்தீவு)

கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவிருந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஆவணங்கள் வழங்கல் நடமாடும் சேவை திட்டமிட்டபடி விரைவில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மக்களுக் கான தேசிய அடையாள அட்டை, மோட்டார் பதிவுப்பத்திரம், திருமணப் பதிவுச்சான்றிதழ் ஆகியன வழங் கும் நகழ்வு கடந்த 6,7,8, ஆம் திகதிகளில் முல்லைத்தீவில் இரு இடங்களில் நடைபெறவிருந்தது.

பின்னர் இவை குறிப் பிடப்பட்ட நாட்களில் நடைபெறாமல் பிற்போடப்பட்டது.

இந்த நடமாடும் சேவை விரை வில் நடைபெறவிருப்பதால், குறிப்பிட்ட இந்தச் சான்றிதழ் பெறுவதற்கு அவசியமான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்று தயார் நிலையில் வைத்திருக்குமாறு உதவிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் தெரிவித்தார்.

# பிற்போடப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்படவிருந்த மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டப் போட்டிகள், பாடசாலைகளுக்கு இடையே நடை பெறுகின்ற பெரு விளையாட்டு காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என - தமிழீழ விளையாட்டுத் துறையினர் அறிவித்துள்ளனர். போட்டி நடைபெறும் திகதி பின் னர் அறிவிக்கப்படும்.

# கல்வி நிலை வீழ்ச்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் கல்வி நிலை அண்மைக்காலமாக வீழ்ச்சியடைந்து செல்கிறது.

இந்தக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நிலவிவரும் பெரும் ஆசிரியப் பற்றாக்குறையினால் - கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் பெரிதும் வீழ்ச்சி நிலை காணப்படுகிறது.

இவற்றைவிட மிகவும் பின்தங்கிய பாடசாலைகளும் பெரும் ஆசிரியப் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை போன்ற அடிப்படை வசதியின்மை பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன.

# மெய்வன்மை போட்டி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கான மெய்வன் மைப் போட்டி எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக் குழுச் செயலாளர் மைக்கல் தியாக ராஜா தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மே-12

1884 : ஹைட்ரோ கார்பனை பிரித்தெடுக்கும் வழிமுறையைக் கண்டு பிடித்த பிரான்ஸ் விஞ்ஞானியான சார்ள்ஸ் அடோல்ப் உர்ட்ஸ் மரணமானார்.

1902 : தமது தொழிற்சங்கத்தை சுரங்க உரிமையாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தால், அமெரிக்காவில் "யுனைட்டட் மைன் வேர்க்கர்ஸ் யூனியன்" என்ற அமைப்பைச் சேர்ந்த நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் சுமார் 140000 பேர் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

1916 : ஈஸ்டர் கிளர்ச்சித் தலைவர்களுக்கு அயர்லாந்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

1917 : உணவு கேட்டுப் பொதுமக்கள் போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் பெரும் கலவரத்தில் ஈடுபட்டதால், நூற்றுக் கணக்கானோர் சுட்டுக் கொல்லப்பட்டதோடு, இராணுவச் சட்டமும் கொண்டுவரப்பட்டது.

1918 : ஒஸ்ரியா - ஜேர்மன் உடன்படிக்கையில் ஜேர்மனிய அதிபர் கெய்சரும், ஒஸ்ரிய மன்னர் சார்ள்ஸ்ஸும் கையெழுத்திட்டனர்.

1926: இத்தாலி நாட்டைச் சேர்ந்த அம்பர்ட்டோ நொமிலி என்ப வர் தானே வடிவமைத்த நோர்ஜ் என்னும் விமானக் கப்பலில் ஸ்பிட்ஸ் பெர்ஜரிலிருந்து அலாஸ்கா வரை வட துருவத்தை தானே தனியாக ஓட்டிச் சென்று கடந்தார். இதற்காக இவருக்கு 16 மணி நேரம் தேவைப்பட்டது.

1935 : மதுப் பழக்கத்துக்கு அடிமையானவர்களை அந்தப் பழக்கத்தில் இருந்து விடுவிக்கும் நோக்குடன் ஒஹியோவில் அக்ரான் என்னும் இடத்தில் வில்லியம் வில்சன் என்பவரால் "அல்ககாலிஸ் அனாமதேயம்" என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1940 : தாய் நாட்டுப்பற்றையும், தேசிய எழுச்சியையும் ஊக்குவிப்பதற்கான வின்சன்ட் சேர்ச்சிலின் சொற்பொழிவுத் தொடரில் முதலாவது சொற்பொழிவு ஒலிபரப்பப்பட்டது. அந்தச் சொற்பொழிவில் "உங்களுக்கு இரத்தத்தையும், கடின உழைப்பையும், கண்ணீரையும், வியர்வையையும் தவிர கொடுப்பதற்கு வேறு எதுவும் என்னிடம் இல்லை என்று குறிப்பிட்டார்.

1943 : வட ஆபிரிக்காவின் டூனிஷியாவில் நேசப்படைகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஜேர்மனியின் முக்கிய தளபதிகளுள் ஒருவரான ஜெனரல் வான் அர்னிம் சரணடைய, நேசப்படைகள் 275000 ஜேர்மனியப் படை வீரர்களைப் போர்க் கைதிகளாகப் பிடித்துக் கொண்டனர்.

1944 : இரண்டாம் உலகப் போரில் இத்தாலியில் காரி நதியைத் தாண்டியதும் இந்தியாவின் பஞ்சாப் படையணியைச் சேர்ந்த "கமல் ராம்" என்ற வீரன் ஜேமன் காவலரணைத் தாக்கி அங்கிருந்த வீரர்களைக் கொன்று அந்த அரணைக் கைப்பற்றினான். ஏதோ ஒரு படைப்பிரிவுதான் தாக்குகிறது என்ற பயப்பீதியில் மற்றைய இரு காவலரணைச் சேர்ந்த எதிரிப் படையினர் தாமாகவே இவனிடம் சரணடைந்தனர். இவனது இந்த வீரச் செயலைப் பாராட்டி "விக்டோரியா கிராஸ்" என்னும் விருது இவனுக்கு வழங்கப்பட்டது.

1949 : ரஷ்யா தனது பெர்லின் முற்றுகையை நீக்கிக் கொண்டது.

1965 : மேற்கு ஜேர்மனியும், இஸ்ரேலும் இராஜரீதியிலான உறவைப் பேணப்போவதாக கூட்டறிக்கை வெளியிட்டன. இந்த அறிக்கையைத் தொடர்ந்து சிரியா, ஈராக், லெபனான், ஜோர்தான், ஓமான், குவைத், சவுதி அரேபியா, அல்ஜீரியா, அரபு ஐக்கியக் குடியரசு, சூடான் போன்ற நாடுகள், மேற்கு ஜேர்மனியுடனான தமது இராஜரீக உறவுகளைத் துண்டித்துக் கொண்டன.

1972 : விமானப் போக்குவரத்துத் தவிர மற்றைய எல்லாவகைப் போக்குவரத்துகளையும் தடையின்றி நடத்துவதற்கு கிழக்கு, மேற்கு ஜேர்மனிகள் முதன்முதலாக ஒப்பந்தம் செய்து கொண்டன.

1988 : கனடாவின் கியூபெக் மாநிலத்தில் பிறப்பு வீதம் மிகக் குறைவாக இருந்த காரணத்தால், இந்த மாநில அரசு ஒவ்வொரு குடும்பத்திலும் பிறக்கும் முதல் இரு குழந்தைகளுக்கும் 500 டொலர்கள் ஊக்க ஊதியம் கொடுப்பதாகவும், இரண்டுக்கு மேல் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு 3000 டொலர்கள் கொடுப்பதாகவும் அறிவித்தது.

1991 : 32 வருடங்களுக்குப் பிறகு, நேபாளத்தில் அனைத்துக் கட்சித் தேர்தல் நடைபெற்றது.

1992: இந்தியா இஸ்ரேலில் தனது தூதரகத்தை அமைத்துக் கொண்டது

1994 : உள வரலாற்றியலின் தந்தையருள் ஒருவராகப் போற்றப்படுபவரும், உளப் பகுப்பாய்வியல் மேதையுமான எரிக் - எரிக்ஷன் காலமானார்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

மனநலம் மன் உயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்

திருக்குறள்

# நமது நோக்கு

## இந்தியா மீதான ஜே.வி.பியினரின் திடீர் அக்கறையின் உள்நோக்கம்...!

அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் இந்தியாவைப் பலவீனப்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளைப் பயன்படுத்துவதாகவும், இதன் காரணமாக அவர்கள் கொடுக்கும் அழுத்தத்தின் அடிப்படையில் பொதுக் கட்டமைப்பு மற்றும் இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி சுயாதீனமாக எடுக்கும் முடிவுகள் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடாதென ஜே.வி.பியின் தலைவரான சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார்.

அவர் இதனைப் பொதுக் கட்டமைப்புக்கு எதிரான பிரசாரக்கூட்டத்தில்தான் கூறியிருக்கிறார் என்பதையும் கவனத்திற்கொள்ளல் அவசியமாகும்.

ஏற்கனவே இரு தினங்களுக்கு முன்னர்தான் இலங்கை அரசு புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பான நிலைப்பாட்டில் இந்தியாவின் வருப்பமின்மையை வெளிப்படுத்தும் செய்தியொன்றை இலங்கையின் வெளிவிவகார அமைச்சிடம் கையளித்ததாகவும், செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இந்தியாவுக்கு வக்காளத்து வாங்கும் தொனியில் ஜே.வி.பி தலைவர் பேசியுள்ளதன் காரணிகள் வெளிப்படையானவையே ஆகும். இதே ஜே.வி.பிதான் 1987 முதல் 90 வரையான காலப்பகுதியில் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினரை வெளியேற்றக்கோரி தென்பகுதியெங்கும் மேற்கொண்ட இந்திய எதிர்ப்புப் பிரசாரம் மற்றும் வன்முறை நடவடிக்கைகளின் போது இந்தியப் பொருட்களுக்கான விற்பனையைத் தடைசெய்தது. இந்திய உடைகளை வீதிகளில் போட்டு எரித்தது. இந்திய ஓட்டோ வாகனங்களை ஓடவிடாது தடுத்தது. இந்திய இராணுவத்தை வெளியேற்றுமாறுகோரி அப்போதைய ஜே.ஆர். மற்றும் பிரேமதாஸ தலைமையிலான ஆட்சிக்கு எதிராக அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளும் அதன் எதிரொலிகளும் வரலாற்றுப் பதிவுகளாக உள்ளன.

1987 ஜுலையில் ஜே.ஆரும், ராஜீவ் காந்தியும் செய்துகொண்ட உடன்பாடு இந்திய நலன்களைப் பாதுகாக்க மட்டுமல்ல ஈழத் தமிழ் மக்களின் நலன்களுக்கு ஆபத்தையும் அழிவையும் ஏற்படுத்தும் உள்நோக்கத்தைக் கொண்டதாகவே இருந்தது. அப்போது அந்த உடன்பாட்டை இந்திய மேலாதிக்கத்தின் ஆபத்தான சமிக்ஞை என வர்ணித்தவர் ரோகண விஜேவீர. அதற்கு முன்னர் 1971 இல் 'இந்திய விஸ்தரிப்பு வாதம்' ஜே.வி.பியினரின் கொள்கை கற்பித்தல் வகுப்புகளில் ஐந்து பிரதான பாடங்களில் ஒன்றாக இருந்தது என்பதும் உண்மையே.

இந்தியாவுக்கு எதிரான ஜே.வி.பியினரின் இந்த நிலைப்பாடே 1977 ஆம் ஆண்டின் ஏப்ரல் புரட்சியை இந்தியப் படையை இறக்குமதி செய்து ஜே.வி.பியினரை துவம்சம் செய்து, அழிக்க சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு உதவியதெனலாம்.

அந்தக் காலங்களிலெல்லாம் இந்திய நலனை ஜே.வி.பியோ, ஜே.வி.பியின் நலனை இந்தியாவோ கருத்திற் கொண்டது கிடையாது. இந்தியாவை - இலங்கையைத் தன் மேலாதிக்கப் பொறிக்குள் சிக்கவைக்க முயலும் ஒரு ஆக்கிரமிப்புச் சக்தியாகவே ஜே.வி.பி கருதியது.

அதே ஜே.வி.பிதான் - இப்போதும் இந்தியாவின் இலங்கை குறித்த நிலைப்பாட்டின் எவ்விதமான கொள்கை மாற்றமும் ஏற்படாத நிலையிலும், இந்தியாவுக்கு விசுவாசமாக, இந்திய நலனில் பெரும் அக்கறை கொண்டதாக, அது தன்னைக் காட்டிக்கொள்ளத் தொடங்கியுள்ளதென்றால், அதற்கு வேறு அரசியல் உள்நோக்கம் உள்ளதென்றே கூறவேண்டும்.


இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகத்தின் குறிப்பாக ஐரோப்பிய மற்றும் மேற்குலக சமூகத்தின் புதிய நெருக்கமான பார்வையும், அணுகுமுறை மாற்றங்களும் இந்தியாவுக்கு ஏற்புடையதாக இல்லையென்பதால், இன்றைய சமாதான சூழலை வலுப்படுத்தும் எந்தவொரு நிர்வாகக் கட்டமைப்பையும் - அது மனிதாபிமானப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பாக இருந்தாலும் கூட - அது அங்கீகரிக்கத் தயாராக இல்லை என்பது உண்மையாகும்.

இதேகொள்கையைக் கொண்ட ஜே.வி.பியினர், சமாதான சூழலைக் குழப்பவும், பொதுக் கட்டமைப்பினை உருவாகாது தடுக்கவும் இந்தியாவை ஒரு கருவியாகக் கையாள நினைப்பதன் வெளிப்பாடே அவர்களின் திடீர் இந்திய விசுவாசப் போக்காகும்.

இதன்மூலம் இந்திய - ஈழத் தமிழர் உறவைச் சிதைக்கவும், சமாதான சூழலைக் குழப்பி அரசியல் ஆதாயம் பெறவும் ஜே.வி.பி. போடும் ஒரு திட்டத்தின் ஒரு அம்சமாகவே இந்தியாவின் பாதுகாப்புக் குறித்து ஜே.வி.பியினர் அதிகம் அக்கறை கொண்டு பேசுவதைக் கூறமுடியும்.

இந்தியா மீதான - அதன் பாதுகாப்பு மீதான ஜே.வி.பியின் திடீர் அக்கறை - ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுவது போன்றும் இருக்கிறதல்லவா?

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# தமிழர் தாயகத்தை தாரைவார்க்க சதியா?

கிழக்கில் மனிதப் படுகொலைகளும், வன்செயல்களும் கடந்த ஒரு வருடத்தில் அதிகரித்து வந்திருக்கிறது. இவற்றைப் பூரணமகக் கட்( )படுத்துவதற்கு கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கெள்வதற்கு ஜனாதிபதி உறுதி பூண்டிருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது கவனித்தீரா என்று கேட்டார் நண்பர் பரமசிவம்.

ஒவ்வொரு சம்பவத்தைத் தொடர்ந்தும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்று அறிவிப்புக்கள் வரும். ஆனால் நிலைமை அப்படியேதான் இருக்கும் என்றேன்.

கிழக்கை எப்படியும் வடக்கிலிருந்து பிரித்துவிட வேண்டுமென்பது இன்று நேற்றல்ல இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள் எடுத்துவரும் முயற்சி. இந்த முயற்சியில் ஒன்றாகத்தான் கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டது. சாத்வீகப் போராட்ட காலத்தில் கிழக்கின் மண்ணை அபகரிக்கும் வேலைகள் சுலபமாக நடைபெற்றன. இப்பொழுது இது கொஞ்சம் கடினமாகிவிட்டது. என்றாலும் மண் அபகரிப்பு கிழக்கில் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக இருந்தால் - கிழக்கில் மண்ணை அபகரிப்பது கஷ்டம் என்பதை உணர்ந்த சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள், பல்வேறு தந்திரங்களைக் கையாண்டனர். இவர்கள் தங்கள் காரியத்தைச் சுலபமாக ஈடேற்றுவதற்கு இப்போது ஒரு கோடரிக்காம்பு அகப்பட்டது. இதை வைத்தே கிழக்கைப் பிரித்துவிடுவதற்கு இன்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார்கள் என்றேன்.

இப்பொழுது கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்போவதாக வெளிவந்திருக்கும் செய்தியைப் பார்த்தால், இதுவரை பாதுகாப்புக்காக வடக்கிலும் கிழக்கிலும் மூலைக்கு மூலை முகாமிட்டுள்ள பாதுகாப்புப் படைகள் - சும்மா வேடிக்கை பார்ப்பதற்காகத்தானே அமைக்கப்பட்டிருக்கின்றன என்றுதானே அர்த்தப்படும் என்றார் பரமசிவம்.

இன்னொரு வார்த்தையில் சொன்னால் கோடரிக்காம்பும், அதன் ஆட்களும் பாதுகாப்புப்படை முகாம்களிலிருக்கும் இடங்களுக்குச் சமீபத்தில் ஒளித்து மறைந்து இருந்தார்கள். இவர்கள் இருக்குமிடங்கள் தெரிந்தபோது படைகளுக்கும், அதற்கும் எந்தத் தொடர்புமில்லை என்று படையினர் விளக்கம் சொன்னார்கள். இனி கடுமையான பாதுகாப்பு நடவடிக்கை என்று சொல்வதன் அர்த்தம் கோடரிக்காம்புக்கும், அதன் ஆட்களுக்கும் சிறிலங்கா அரசு கடுமையான பாதுகாப்பு வழங்கும் என்று அர்த்தப்படுவதாகவே தோன்றுகிறது. இதுவரை கோடரிக்காம்புக்கு முகவரி இல்லை. கிழக்கு மக்களின் ஆதரவு அதுக்கு இருந்தால், ஓர் அங்குல இடமாவது அதற்கென்று இருக்கும். இனி அரசுதான் அதற்கு முகவரி தேடிக்கொடுக்கப் போகிறது போலத் தெரிகிறது. ஏனெனில் சந்திவெளியில் திடீரென முகாம் அமைத்ததற்கு இருபகுதியும் மோதிக்கொண்டால் பொதுமக்களைப் பாதுகாக்கவே அந்த முகாம் அமைக்கப்பட்டதாக இராணுவத்தினர் சொன்னார்கள். அந்த முகாமைப் பொது மக்கள் எதிர்த்தபோது, துப்பாக்கிப் பிரயோகம் செய்து உயிர்ப்பலி எடுத்தார்கள். பலரைக் காயப்படுத்தினார்கள். இப்போது அந்த முகாமையுமே எடுத்துவிட்டார்கள். இனிக் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப் போகிறார்களாம் என்றேன்.

போர்நிறுத்த உடன்படிக்கையை மீறித்தான் சந்திவெளிச் சந்தியில் படைமுகாம் அமைக்கப்பட்டது. துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது போர்நிறுத்த மீறல் இல்லையா? இது மட்டுமல்ல எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் புலிகள் மீது சுமத்தவேண்டும் என்பது இப்போது இலங்கையில் எழுதப்படாத ஒரு விதியாக இருக்கிறது. சிங்கள மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளை - கோரப் புலிகளாகக் காட்டுவதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த வருடம் தென்னிலங்கையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது, புலிகள் நேரடியாகவே நிவாரண உதவிகள் வழங்கி சிங்கள மக்கள் மனதில் கொஞ்சம் இடம் பிடித்தனர். இது தவிர கலைக்கூடல் என்ற கலாசார நிகழ்வுகளினாலும் புலிகள் மீது பூசப்பட்ட சேறு சிங்கள மக்கள் மத்தியில் கொஞ்சம் கரைந்திருந்தது. புலிகள் எங்கே தங்கள் முயற்சியில் வெற்றிபெற்று விடுவார்களோ என்ற அச்சம் சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளிடம் மட்டுமல்ல, நம்மட சங்கரி, டக்ளஸ் கோஷ்டிகளுக்கும் ஏற்பட்டுவிட்டது என்றார் பரமசிவம்.

இடைக்கால நிர்வாக தன்னாதிக்க அதிகாரசபையும் புலிகளுக்குக் கொடுக்கக்கூடாது. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கான பொதுக் கட்டமைப்பும் புலிகளைச் சேர்த்து அமையக்கூடாது. மொத்தத்தில் விடுதலைப் புலிகளுக்கு எந்த அங்கீகாரமும் கிடைத்துவிடக்கூடாது என்பதில் ஜே.வி.பி, ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள இயக்கம் போன்ற இனவாத அமைப்புகள் ஒருபுறம் எதையும் வெற்றிகரமாகச் செய்ய வக்கற்ற தமிழர் என்று சொல்லிக்கொள்ளும் கையாகாலாகாததுகளும் பின்னால் நின்று தூண்டிக்கொண்டிருக்கின்றன என்றேன்.

இப்பொழுது பொதுக்கட்டமைப்பு உருவாகும் சாத்தியமில்லை. நாங்களே மக்களுக்கு நேரடியாகக் கொடுக்கிறோம் என்று ஆளாளுக்குப் பங்குபோட்டுக் கொள்ள முயற்சிக்கிறார்கள். பொதுக்கட்டமைப்பு பற்றி முதலில் சொன்ன அம்மையார் சந்திரிகா என்ன செய்யப் போகிறார். சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இந்தியா போகிறார். சந்திரிகா அம்மையாரும் இந்தியா போகப்போகிறார். பொதுக்கட்டமைப்பும் இந்தியா போகப்போகிறது போலிருக்கு என்றார் பரமசிவம்.

போகிற போக்கைப் பார்த்தால் இந்தியாவிடமே எல்லாவற்றையும் கொண்டுபோய்க் கொடுத்துவிடு வார்கள் போலிருக்கே என்றேன்.

தமிழனுக்கு இலங்கையில் ஒரு தாயகம் இருக்கக்கூடாது. தமிழன் இலங்கையில் எந்த உரிமையும் கோரக்கூடாது என்பது சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகளின் ஒரே குறிக்கோள்.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதாக இருந்தாலும், தமிழ் மக்கள் தங்கள் தாயகத்துக்கு விடுதலை பெறுவதாக இருந்தாலும், பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் பெற்றுவிடக்கூடாது என்பதில் கையாலாகாத இன்றைய "தமிழர் கூட்டம்" குறியாக இருக்கிறது.

இலங்கையில் தமிழ் மக்கள் தங்கள் தாயகத்துக்கு விடுதலைபெற்று சுதந்திர தமிழீழம் அமைத்துவிட்டால் இந்தியாவில் தமிழர்கள் சும்மா இருந்தாலும் அசாம், நாகலாந்து, ஆந்திரா, காஷ்மீர் என்று பல மாநிலங்கள் விடுதலை கோரிப் போராடுவார்களே என்ற அச்சம் இந்தியாவுக்கு.

இந்தியாவுக்கு இந்த அச்சத்தை ஊட்டுவதற்கென்றே கதிர்காமரும், அவருக்கு அப்பனுக்கு அப்பனான ஆனந்தசங்கரியும் காவடி தூக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்றார் பரமசிவம்.

அப்படியானால் சிக்கும் அரசு இந்தியாவின் ஒரு மாநிலமாக மாறியதுபோல, இலங்கையின் தமிழர் தாயகத்தை சங்கரி - டக்ளஸ் கூட்டின் ஆதரவுடன் சிங்கள ஆதிக்க சக்திகள் தாரைவார்க்க முன்வருவார்களோ என்றேன்.

அப்படி ஒரு நிலை என்றால் உண்மையில் தேசபக்தியுள்ள சிங்கள மக்கள் - விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து, புதிய ஆக்கிரமிப்பை எதிர்க்க முன்வருவது தவிர்க்கமுடியாமல் போகும் என்றார் பரமசிவம் எழுந்து நடந்தபடியே.

இப்பொழுது நிலைமைகள் நல்லதாகத் தெரிய வில்லை. ஒரு மோதலுக்கு சிலர் ஆயத்தப்படுத்துவதாகத் தான் தெரிகிறது. என்றாலும் நாம் எதையும் கேட்டோ வாதாடியோ இனியும் பெற முடியாது. வடுதலை பெறாமல் எதையும் பெற முடியாது என்று திரும்ப நின்று சொல்லி நகர்ந்தார் அவர்.

நினைவுக் கட்டுரை... கதிர்

# நாட்டுப் பற்றாளர் குலசேகரத்தின் விடுதலைப் பயணத்தின் சில பதிவுகள்



ஆமை ஆயிரம் முட்டைகளை இட்டுவிட்டு எந்தவித ஆரவாரமும் இல்லாமல், அங்கலாய்ப்பும் இல்லாமல் இருப்பது போன்று, தமிழீழ விடுதலைக்கு மாபெரும் பங்களிப்பைச் செய்து விட்டு ஆரவாரம் இல்லாமல் மறைந்து விட்டார் நாட்டுப்பற்றாளர் கந்தையா குலசேகரம்.

1936 ஆம் ஆண்டு யூன் திங்கள் 13 ஆம் திகதி யாழ்ப்பாணம் கந்தரோடையில் இவர் பிறந்தார். உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த கந்தையா - அவரது முறைப்பெண் பகவதியம்மா ஆகியோரின் மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தவர் குலசேகரம். இவரது அக்காவும், அண்ணரும் மலேசியாவில் பிறந்தனர். ஆனால் குலசேகரத்தின் குழந்தைப் பிறப்புக்காக இவரது தாயார் யாழ்ப்பாண மண்ணுக்கு வந்திருந்தார். இதனால் தானோ என்னவோ, இவர் தமிழ் மண்மீது காதல் கொண்டிருந்தார். ஆரம்பக் கல்வியை மலேசியாவிலேயே மேற்கொண்டார். இரண்டாவது உலகப் பெரும் போரின் தாக்கத்தால் புகையிரதத் திணைக்களத்தில் தொழில் புரிந்த தகப்பனார் - முதிர்ச்சி அடையாமலே பணியிலிருந்து இளைப்பாறிக் கொண்டு தாய் நாடு திரும்பி, உரும்பிராயில் நிரந்தரமாக வசிக்கலானார். இதையடுத்து இவர் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆற்றல் மிக்கவராக இருந்தார்.

### பகுத்தறிவுப் பாசறையில்.

தமிழ் நாட்டில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரின் பார்ப்பனீய எதிர்ப்புச் சமூகசீர்திருத்த தமிழ் வளர்ச்சிக் கருத்துக்கள் பரவத்தொடங்கிய பின்பு - யாழ்ப்பாணத்தில் பகுத்தறிவு இயக்கம் தோற்றம் பெற்றது. இந்தப் பகுத்தறிவு இயக்கத்தில் உறுப்பினராகத் தன்னையும் இணைத்துக் கொண்டார். சமூக நீதி, சாதி ஒழிப்பு, பார்ப்பனீயத் தாக்கத்திலிருந்து மீட்பு என்பனவற்றைத் தனது கொள்கையாக இறுதிவரை கடைப்பிடித்தார். தான் இறந்த பின்பு தமிழ் முறைப்படி பார்ப்பனீயத் தொடர்போ, வடமொழிச் சடங்கோ இல்லாமலே இறுதிச் சடங்குகள் நடைபெறவேண்டுமெனக் கூறியிருந்தார். அவ்வாறே அதுவும் நடைபெற்றமை அவரது பகுத்தறிவுக் கொள்கையின் உறுதிப்பாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

தூய தமிழ்ச் சொற்கள் இருக்கக் கூடியதாக வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தவதை இவர் விரும்புவதில்லை. தூயதமிழில் எழுதிக் கொடுக்கும் பொழுது அந்தச் சொற்களைப் போடுவதில்லை என்றும், வடமொழிச் சொற்களே கட்டாயமாக எழுதப்பட வேண்டுமென்ற சில செய்தி ஊடகங்களின் கருத்துக்களைக் கண்டு வேதனைப்பட்டார். வள்ளுவத்திலுள்ள சா, சாவு என்ற சொற்களையே ஏற்கமாட்டோம் எனக் கூறும் ஊடகங்களைக் கண்டு நொந்து போனவர் குலசேகரம். தமிழ் மொழியை வேற்று இனத்தவர் அழிக்கமுடியாது. தமிழர்களே இவ்வாறு கலப்புச் செய்து தமிழை அழித்து விடுவார்கள் என்று கூறி வருத்தப்படுவார் .

### தமிழரசுப் பாசறையில்.

தமிழுணர்வு மிக்கவராகத் திகழ்ந்த குலசேகரம், தந்தை செல்வா, வன்னியம், டாக்டர் நாகநாதன் போன்றோரின் மேல் பற்றுமிகுந்தவராக இருந்தார். தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகவும், தொண்டராகவும் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். குலசேகரத்தை அவர்கள் சேகரம் என்று அழைப்பார்கள். தமிழரசுக் கட்சி நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்குபற்றியவர். சில போராட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்களால் மாத்திரம் நடத்தப்பட்டன. அவற்றிலும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்குக் காரணம் அவரது அசையாத கொள்கைப் பற்றும் உறுதியுமாகும்.

தந்தை செல்வாவைக் கேலி பேசியவரும், எந்தப் போராட்டத்திலும் பங்கு கொள்ளாதவரும், சிங்கள ஆட்சியாளர்களுக்குக் காவடி தூக்கிய சங்கரி - சென்ற தேர்தலில் தந்தை செல்வாவின் பெயரை வைத்துத் தேர்தலில் போட்டியிட்டதைக் கண்டு வேதனைப்பட்டார். தமிழரசுக் கட்சித் தொண்டர்களாக இருந்த ஒருவரோ, இருவர் சங்கரியின் அரசியல் துரோகத்தனத்தையும், செவிட்டுச் செல்வநாயகம் என்று அவர் பேசிய பேச்சுக்களையும் கேட்டு வேதனையும் கோபமுமடைந்தவர்கள் இந்தத் தேர்தலில் சங்கரியுடன் நிற்பதைப் பார்த்துக் கவலையடைந்தார்.

தமிழரசுக் கட்சித் தலைமைப் பீடத்துக்கும், கொழும்புக் கிளைக்குமிடையே பெரிய மோதல் ஒன்று அப்பொழுது ஏற்பட்டது. செய்தி ஊடகங்கள் தமிழரசு கட்சியை உடைப்பதிலும், அழிப்பதிலும் அதிக அக்கறை காட்டி வந்தன. அப்பொழுது கொழும்புக் கிளையில் உறுப்பினராக இருந்த குலசேகரம் செயலாளராகப் பொறுப்பேற்று ஒரு சுமுக நிலையை ஏற்படுத்தி, கட்சியின் வளர்ச்சிக்குத் தனது பங்களிப்பை வழங்கினார். இதன் பின்னர் உரும்பிராய்க்குத் திரும்பிய குலசேகரம் தமிழரசுக் கட்சியின் உரும்பிராய்க் கிளைக்குச் செயலாளராகப் பதவியேற்றுக் கட்சி வளர்ச்சிக்காக உழைத்து வந்தார். தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் அனைவருடனும் மிக நெருக்கமாக இருந்தார்.

### சிவகுமாரனுக்குப் பிடித்த அண்ணன்.

தமிழரசுக் கட்சியில் இறுக்கமாகப் பிணைந்திருந்தாலும் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை இவர் ஆதரிக்கப் பின் நிற்கவில்லை. குறிப்பாகச் சிவகுமாரனின் துணிச்சல் மிகு போராட்டத்துக்கு அவரது ஆதரவு. இருந்தது. சிவகுமாரனும் தனது செயற்திட்டங்கள் அனைத்தையும் குலசேகரத்துடன் பகிர்ந்து கொள்வான். சேகரண்ணையின் உறுதியான விடுதலைக் கொள்கை அவனுக்கு நன்று பிடித்திருந்தது தான் காரணம். சிவகுமாரன் தனது வரவு செலவுக் கணக்குகள் எல்லாவற்றையும் எழுதி இவரிடமே ஒப்படைத்திருந்தான். சிவகுமாரன் இறந்து சில ஆண்டுகளின் பின்பு ஒரு சுற்றிவளைப்பு நடந்தது. அப்பொழுது குலசேகரத்தின் வீட்டைச் சோதனையிட்ட இலங்கைக் காவல்துறையைச் சேர்ந்த ஒருவர் சிவகுமாரனின் கணக்குகளை அங்கே கண்டு கொண்டார். அவர் ஒரு நல்ல தமிழர் என்பதால், அந்தக் கணக்குகளைக்கூட அங்கிருந்த ஊழியர்கள் காணாவண்ணம் செய்து விட்டு, குலசேகரத்திடம் அவற்றை அழித்து விடும்படி கூறிச் சென்றார். ஆனால் குலசேகரம் அவற்றைப் பாதுகாத்து வந்தார். ஆனாலும் இடம் பெயர்வுகள் அவற்றை அழித்து விட்டன.

சிவகுமாரனின் வீரச்சாவுக்கு பின் அடுத்த ஓராண்டிற்குள் அவனுக்குச் சிலை நிறுவுவதென முடிவு செய்யப்பட்டது. அதில் முதன் மைப் பங்காளியாக இருந்து அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்து முடித்தவர் குலசேகரமேயாவார்.

### தமிழீழத் தேசியத் தலைவரும் குலசேகரமும்

சிவகுமாரனின் மறைவுக்குப் பின்னர் ஓர் இளைஞர் மிதிவண்[illegible] அடிக்கடி குலசேகரத்தின் வீட்டுக்குச் சென்று வருவார். யார் இந்த இளைஞன்? என்று குலசேகரத்தின் மனைவிக்கோ, பிள்ளைகளுக்கோ, தாய், தந்தையாருக்கோ தெரியாது. யார் என்று தாயார் கேட்ட போது அவர் தனது தொழில் ரீதியான வணிகப் பங்காளி என்று சொல்லி மழுப்பி விடுவார். பல மணி நேரம் ஏதோ இரகசியமாகக் கதைக்கிறார்கள். இந்த இளைஞன் தேனீர், கோப்பி குடிப்பதில்லை. பச்சைத் தண்ணிதான் குடிப்பார். சில வேளைகளில் பால் குடிப்பார். என்பது மட்டும் தான் அவர்களுக்குத் தெரியும். நாட்டின் தலைவிதியை மாற்றியமைக்கும் பெரும் வீரன் தங்கள் வீட்டில் இருக்கிறார் என்பது அவர்களுக்கு அப்பொழுது தெரிந்திருக்கவில்லை. இவ்வளவு தூரம் மிகமிக இரகசியமாகக் காப்பாற்றிய பெருமை குலசேகரத்துக்கு உண்டு.

ஆயுதப் போராட்ட தொடக்க காலத்தில் இருந்து அது வளர்ச்சியடைந்தது வரை குலசேகரம் எத்தகைய பங்களிப்பை அதற்கு வழங்கினார் என்பது சில வரிகளில் எழுதக் கூடியதல்ல. தலைவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் பொழுதும் சரி, தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றை எழுதும் போதிலும் சரி பக்கங்களில் அல்ல அத்தியா யங்களிலேயே குலசேகரத்தின் பங்களிப்பை விளக்க முடியும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும் புக் கிளையில் இருந்த உமா மகேஸ்வரனைத் தனது வீட்டில் வைத்துத் தலைவரைச் சந்திக்க வைத்தவர். அதன் பின்னரே தலைவரின் பாசறையில் உமா மகேஸ்வரன் இணைந்து கொண்டார். அதே போன்று உமாமகேஸ்வரன் தலைவருடன் முரண்பட்டபொழுது, தலைவருடன் உறுதியாக இருந்து விடுதலைப்புலிகள் இயக்கத்தை வலுப்படுத்தவும், புலி இலச்சினையை உறுதிப்படுத்தவும் தலைவருக்கு உறுதுணையாக இருந்தவர் குலசேகரம்.

தலைவர் தமி ழகத்தில் இருந்த பொழுது குலசேக ரம் தனிப்பட்ட அலு வலாக அங்கு சென்றிருந்தார். அங்கே பாதுகாப்பு டன் இருந்த தலை வரைச் சேகரம் அண்ணை அடிக் கடி சந்திப்பதும் பல மணித்தியா லங்கள் தனியாக உரையாடுவதும் அங்கிருந்த போரா ளிகளை வியப் பில் ஆழ்த்தியது. அவர்களெல்லாம் பின்னர் தான் சேகரண்ணையின் பங்களிப்பை உணர்ந்து கொண்டார்கள். தமிழகத்திலிருந்து வட இந்தியாவுக்குத் தலைவர் சென்றவேளையிலும், தன்னுடன் குலசேகரத்தை அழைத்துச் சென்றமை அவர்களின் இறுக்கமான தொடர்பை மற்றவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருந்தது எனலாம்.

### இந்தியப் படையதிகாரியின் சூழ்ச்சி

இந்தியப் படைகள் இங்கு வந்த பின்பு சண்டை தொடங்கு முன்னர் குலசேகரத்தின் வீட்டுக்குத் தலைவர் இரண்டோ, மூன்று முறை வந்திருந் தார்.

இவை எல்லாம் இந்தியப் புலனாய்வாளர்களுக்கு எப்படியோ தெரிந்திருந்தது. சண்டை தொடங்கி இடம் பெயர்வு ஏற்பட்டபின், யாழ்ப்பாண நகரத்தில் தங்கியிருந்த குலசேகரம் தனது உரும்பிராய் வீட்டைப் பார்ப்பதற்குச் செல்வார். இவ்வாறு அவர் சென்ற பொழுது ஒரு நாள் இந்தியச் சிப்பாய் ஒருவர் - மிஸ்டர் குல சேகரம் உங்களை எமது உயர் அதிகாரி அழைத்து வரச்சொல்லியுள்ளார், வாருங்கள் என அழைத் துள்ளார். தனது பெயரை அந்தச் சிப்பாய் கூறி யதும் ஆச்சரியப்பட்டுப் போனார் குலசேகரம். அழைப்பை ஏற்று உயரதிகாரியிடம் சென்றார். அந்த உயரதிகாரி குலசேகரத்திடம் கூறினார் குறிப்பிட்ட திகதிகளில் பிரபாகரன் உமது வீட் டிற்கு வந்துள்ளார். அவர் வந்த நேரம், தங்கிய நேரம், சென்ற நேரம் என்பனவற்றை குறிப்பிட்டு எவ்வாறு பிரபாகரனுடன் தொடர்பு ஏற்பட்டது என்றும் கேள்விகள் கேட்டார். ஏதோ சாதுரியமாகப் பதிலளித்த குலசேகரத்தை மீண்டும் வரும் பொழுது தன்னைச் சந்திக்கும் படியும் பவ்வியமாகக் கூறினர். ஆனால் குலசேகரம் தனது வீட்டைப் பார்க்கப் போவதைநிறுத்திக் கொண்டார். இராணுவ அதிகாரிகளின் சூழ்ச்சியிலிருந்தும் தப்பித்துக் கொண்டார்.

பெரும் சோதனைகள் நெருக்கடிகளுக்கிடையில் தமிழீழ விடுதலைப் போருக்கு மிகவும் காத்திரமான பங்களிப்பை, அதுவும் ஆயுதப் போர் தொடங்கிய காலத்தில் தலைவருக்குப் பெரும் துணையாக இருந்தவர் குலசேகரம். ஆங்கிலப் போரியல் நூல்களை, விடுதலைப் போராட்ட நூல்களை வாசித்துத் தலைவருக்கு அவற்றின் விபரங்களை எல்லாம் எடுத்துக் கூறிப் பெரிய உதவிகளைச் செய்தவர் குலசேகரம்.

அதனால் நாட்டுப் பற்றாளராகக் கௌரவிக்கப்பட்டுள்ளார். தமிழீழ விடுதலைக்குப் பின்னர் அவர் மேலும் சிறப்பாகக் கௌரவிக்கப்படுவார் என்பதும் திண்ணம். தமிழீழ நாடு என்றும் குலசேகரத்தை தனது வரலாற்றில் பதித்து வைத் திருக்கும்.

### வருந்துகிறோம் — மன்னிக்கவும்

நேற்றைய தினம் இந்தப் பக்கத்தில் வெளியான மக்கள் இலக்கியத்துக்கு மகிமை தரும் மருத்துவப் பேராசான் - நந்தி என்ற கட்டுரையில் - 'நினைவுக் கட்டுரை' என்று குறிப்பிடப்பட்டு ஒரு பெருந்தவறு ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாக கட்டுரையாளர், வாசகர்கள், மதிப்புக்குரிய டாக்டர் ஐயாவின் குடும்பத்தினர் அனைவருக்கும் ஏற்பட்ட மன உழைச்சலுக்காக வருந்துகிறோம். - மன்னிப்புக் கோருகின்றோம். கணினி அச்சிடலில் ஏற்பட்ட ஒரு தொழில்நுட்பத் தவறே இந்தப் பிழைக்குக் காரணமாகும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

- பிரதம ஆசிரியர் -

# நவம் அறிவுக்கூட கட்டடத் திறப்பு விழா நிகழ்வுகள்








## ஈராக்கில் நடத்தப்பட்ட 6 தாக்குதல்களில் 50 இற்கும் மேற்பட்டோர் பலி; பலர் காயம்!

ஈராக்கில் பாக்தாத், திக்றிற் மற்றும் கவிஜா, ஆகிய மூன்று நகரங்களில் இடம்பெற்ற ஆறு வெவ்வேறான கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதல்கள், குண்டு வெடிப்புக்களினால் 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் பெருமளவானோர் காயமடைந்துள்ளனர்.

முதலாவது தாக்குதல் ஈராக்கின் வடக்கு நகரான திக்றிற்றிலுள்ள சந்தைப் பகுதியில் காாக்குண்டுத் தற்கொலைத் தாக்குதலாக நடத்தப்பட்டது. இதில் 27 பேர் உயிரிழந்ததுடன் 70 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இந்தப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தை இலக்கு வைத்து தற்கொலையாளி காரில் சென்றவேளை, பொலிஸார் காரை மறித்து சந்தைப் பக்கமாகத் திருப்பியவேளை இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது தாக்குதல் வடபகுதி நகரான கவிஜாவில் தற்கொலையாளி ஒருவரால் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதல் பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நிலை யத்திற்கு அருகில் நடத்தப்பட்டது. இதில் படைகளில் சேர வென வந்திருந்தவர்களில் 20 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

மூன்றாவது தாக்குதல் தலைநகர் பாக்தாத்தில் நான்கு வெடிகுண்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. இதில் மூவர் உயிரிழந்ததுடன் எண்மர் காயமடைந்தனர்.

ஈராக், மற்றும் ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படையினரின் நடவடிக்கைக்கென 82 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்க அமெரிக்க செனட்சபை ஏகமனதாகத் தீர்மானித்த மறுநாளான நேற்று ஈராக்கில் இடம்பெற்ற மோசமான தாக்குதல்கள் இவையெனத் தெரிவிக்கப்படுகிறது.



இதேவேளை, கடந்த சில நாட்களாக ஈராக்கின் அன்பார் மாகாணத்தில் தாம் நடத்திய தாக்குதல் நடவடிக்கையில் சுமார் 100 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்ததை கிளர்ச்சிவாதிகள் மறுத்துள்ளனர்.

இதனிடையே அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் அன்பார் மாகாணத்தின் ஆளுனரான ராஜா நவாப் மற்றும் அவரது நான்கு மெய்ப்பாதுகாவலர்களையும் கிளர்ச்சிவாதிகள் கடத்திச் சென்றுவிட்டனர்.

அன்பார் மாகாணத்தில் அமெரிக்கப் படையினர் நடத்திவரும் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டாலே ஆளுநர் விடுவிக்கப்படுவாரென கிளர்ச்சிவாதிகள் அறிவித்துள்ளனர்.




### ஈரானில் நடைபெறவுள்ள தேர்தலில்

## முன்னாள் ஜனாதிபதி றப்சன்ஜானி போட்டியிடவுள்ளதாக அறிவிப்பு



ஈரானில் அடுத்த மாதம் 17ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி றப்சன்ஜானி (வயது 70) போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

எனினும், ஈரானில் ஆன்மீகத் தலைவரான ஆயதுல்லா அலி கொமேனியின் ஆதரவு கிடைக்கமாட்டதெனின், ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப்போவதில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானின் அரசியலமைப்பின்படி தற்போதைய ஜனாதிபதி மொகமட் கதாமி மூன்றாவது முறையாக தொடர்ச்சியாக போட்டியிட முடியாது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பிரபல்யமில்லாத பலர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். இவர்களுள் பெண்களும் அடங்குவர். எனினும், ஈரானிய சட்டத்தின்படி அங்கு பெண்கள் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனது வாழ்க்கையில் அடுத்த மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் நான் போட்டியிடுவதென எடுக்கப்பட்ட தீர்மானம் மிகவும் நெருக்கடி மிக்கதென றப்சன்ஜானி தெரிவித்தார்.

அத்துடன் நாட்டை அழிவுப் பாதையிலும், பதற்றநிலையிலும் இட்டுச் சென்று, அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடவிடாமல் வலதுசாரி மதவாதிகள் தடுத்து விடுகின்றனர். அத்துடன், அடிப்படைவாத சுதந்திர உரிமைகளையும் அவர்கள் தடுத்து வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

றப்சன்ஜானி 1989 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவை ஈரானிய ஜனாதிபதியாக இருந்தவர். இவர் மேற்கு நாடுகளுடன் அனுசரித்து சென்றாலும், ஈரானிய சீர்திருத்தவாதிகளுடன் ஒப்பிடுகையில் ஒரு மத அடிப்படைவாத பழமைவாதி என பி.பி.ஸி செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்தார்.

### ஜோர்ஜிய தலைநகரில்

## புஷ் உரையாற்றிய இடத்திற்குமுன் கைக்குண்டொன்று கண்டுபிடிப்பு!

ஜோர்ஜியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி புஷ் அங்கு பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு முன் உரையாற்றிக்கொண்டிருந்த வேளை முப்பது மீற்றருக்கு முன்னால் கைக்குண்டொன்று கண் டெடுக்கப்பட்டுள்ளதாக ஜோர்ஜிய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கைக்குண்டு மக்களை அச்சுறுத்தும் வகையிலேயே வைக்கப்பட்டுள்ளதென்பது தற்போது தெளிவாக தெரியவருவதாக ஜோர்ஜிய பிரதம பாதுகாப்பு அதிகாரிதெரிவித்தார்.

அத்துடன் இந்தச் செய்கையானது ஊடகங்களை கவரும் ஒரு முயற்சியெனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், அமெரிக்க மற்றும் ஜோர்ஜிய ஜனாதிபதிகளுக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.



இந்தச் சம்பவம் தொடர்பாக தமது இரகசிய சேவைப்பிரிவினர் சம்பவம் நடைபெற்ற இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அமெரிக்க இரகசிய உளவுப்பிரிவு தெரிவித்துள்ளது.

## பூமியைப் போன்ற கிரகத்தை கண்டுபிடிப்பதற்கு முயற்சி!

(பால்டிமோர்)

பூமியைப் போன்ற ஒரு கிரகத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் விண்வெளி விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். ஓரிரு ஆண்டுகளில் இந்த முயற்சியில் வெற்றி கிடைக்கும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

விண்வெளியில் சூரிய மண்டலத்துக்கு அப்பால் முதன்முதலாக வேறு ஒரு கிரகம் இருப்பது 1995 ஆம் ஆண்டுதான் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு 51 பெகாசி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இதுவரை சூரிய மண்டலத்துக்கு வெளியே 145 கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை சூரியனைப்போன்று நட்சத்திரங்களைச் சுற்றி வருவதையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். இந்தக் கிரகங்கள் அனைத்தும் வியாழன் கிரகம் போல் ராட்சச கியாஸ் கோளங்கள் ஆகும். இவற்றில் உயிரினம் வாழ முடியாது.

உயிரினம் வாழக்கூடிய பூமி போன்ற கிரகங்கள் உள்ளனவா? என்ற ஆராய்ச்சியில், விண்வெளி விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு சில ஆண்டுகளுக்குள் சூரிய மண்டலத்தைப் போன்ற ஒரு நட்சத்திர மண்டலத்தைக் கண்டுபிடிப்போம். இந்தக் கண்டுபிடிப்பு, பூமியைப் போல வேறு கிரகம் இருக்கிறதா என்ற கேள்விக்கு விடை தரும் என்று ஸ்பேஸ் ரெலஸ்கோப் சயன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மரியோ லிவியோ கூறினார்.

பூமியைப் போன்று அளவுள்ள கிரகங்களை ஒரு சில ஆண்டுகளில் கண்டுபிடிப்போம் என்று பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக விண்வெளி ஆராய்ச்சியாளர் ஜெய்மி மத்யூஸ் கூறியுள்ளார்.

## கஞ்சா கடத்திய தமிழருக்கு சிங்கப்பூரில் தூக்குத் தண்டனை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரைச் சேர்ந்த 38 வயதுத் தமிழருக்கு கஞ்சா கடத்தல் வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்து அவர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் நாளை வெள்ளிக்கிழமை தூக்கிலிடப்படுகிறார்.

சிங்கப்பூரைச் சேர்ந்த சண்முகம் முருகேசு (வயது 38) கடந்த 2003 ஆம் ஆண்டு மலேசிய எல்லையில் ஒரு கிலோ போதைப்பொருளைக் கடத்தியதாக கைது செய்யப்பட்டார். நீதிமன்றில் இவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்று இவருக்குத் தூக்குத் தண்டனை விதித்தது.

இரட்டையாகப் பிறந்த 14 வயது மகன்கள், அப்பாவைத் தூக்கில் போட்டால் நாங்கள் அநாதைகளாகிவிடுவோம் என்று கூறி தூக்குத் தண்டனைக்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி எஸ்.ஆர்.நாதனுக்கு மன்னிப்பு வழங்கக்கோரி மேன்முறையீட்டு மனு அனுப்பப்பட்டது. மன்னிப்பு அளிக்கத் தகுதி இல்லை என்று ஜனாதிபதி கூறிவிட்டார்.

இந்த நிலையில் முருகேசுவின் குடும்பத்துக்கு வந்த அறிக்கையில் மே 13 ஆம் திகதி (நாளை) முருகேசு தூக்கிலிடப்படுவார் என்று கூறப்பட்டுள்ளது.

கஞ்சா கடத்தலுக்கு உலகிலேயே கடுமையான சட்டத்தை சிங்கப்பூர் அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. 500 கிராமுக்கும் அதிகமாக கஞ்சா கடத்தும் எந்த ஒருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்படும் என்பது அந்த நாட்டின் சட்டம் ஆகும்.

சிங்கப்பூரில் 1991ஆம் ஆண்டு முதல் 400 பேர் தூக்கிலிடப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் கஞ்சா கடத்தலில் சம்பந்தப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய

# படையினர் - பொலிஸார் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும்!

ஜனாதிபதிக்கு மட்டு.எம்.பிக்கள் கடிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - சந்திவெளியில் இராணுவத்தினருக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரி.கனகசபை, தங்கேஸ்வரி கதிர்காமர், எஸ்.ஜெயானந்தமூர்த்தி மற்றும் பி.அரியநேந்திரன் ஆகியோர் கூட்டாக இது தொடர்பாக நேற்று அவசர கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் -

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வீதியின் இருபுறமும் அமைதியான வழியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இதுதொடர்பான நிலைமையை போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் அவதானித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கு வந்திருந்த பொலிஸாருடன் நாங்கள் இந்த வீதித்தடையை அகற்ற வேண்டியதன் அவசியம் பற்றிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டபோது- பொலிஸார் பண்பற்ற முறையில் நடந்துகொண்டார்கள். இவர்களைச் சுடவேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள். இந்த நேரத்தில் எமக்கும் அவர்களுக்குமிடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

இப்படி நிலைமை இருக்கையில், அங்கு கவச வாகனத்தில் வந்த இராணுவத்தினர் மக்களை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். நாம் நிறுத்துமாறு கத்தினோம். அதனை அவர்கள் செவிமடுக்காமல் சரமாரியாகச் சுட்டார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் வெளியிட்ட கருத்து உண்மைக்குப் புறம்பானது.

அவர் கூறுவதுபோல் எந்தவொரு இராணுவத்தினரோ பொலிஸாரோ காயமடையவில்லை. அவர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இதில் இடம்பெறவில்லை.

இராணுவம் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தால்தான் யுவன் அப்பு கந்தசாமி (வயது 70) என்பவர் கொல்லப்பட்டார்.

தாக்குதல் மற்றும் துப்பாக்கிப்பிரயோகத்தில் செய்தியாளர் எம்.ஜி.நாசார் உட்பட மூன்று பெண்கள் அடங்கலாக 20 பேர் காயமடைந்தார்கள். இது தான் உண்மை.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவம் மற்றும் பொலிஸார் மீது விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவும்.

அப்பாவி மக்களைத் துன்புறுத்தவோ இப்படியான மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்று அவர்களுக்கு உரிய அறிவுறுத்தலை விடுக்குமாறும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

## கிழக்கு பல்கலை சமூகம்...

குழு இந்தச் சம்பவத்தை நேரில் கண்டதால் இது தொடர்பான விசாரணைகளில் மௌனம் சாதிக்காமல் அதுபற்றிய அறிக்கையை உடன் வெளியிடவேண்டும். ஆகியவை உட்பட சில வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப் பினர்.

'எங்கள் தாகம் தமிழீழ தாயகம் எங்கள் தலைவர் பிரபாகரன்'

'இராணுவ அடக்குமுறை தொடருமானால் நாங்கள் தொடர்ந்து பொறுக்கமாட்டோம்'

என்பவை உட்பட மேலும் சில வாசகங்களும் காணப்பட்டன.

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் சுமார் மூன்று மணி நேரம் செயலிழந்திருந்தன.

## சர்வதேச...

நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் ஆசிய - பசுபிக் நாடுகளின் கடற்படைகள் பங்கேற்கவுள்ளதுடன் - ஆசிய, பசுபிக் நாடுகளின் கடற்படைத் தளபதிகளுக்கும் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## யசூஷி அகாஷி...

களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் என ஜப்பானிய தூதரகம் தெரிவித்தது.

மேலும் கண்டியில் இந்தமாதம் 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இலங்கையின் அபிவிருத்தி சம்பந்தமான மாநாட்டிலும் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் விடயத்தில் தொடர்ந்து பங்களிப்புச் செலுத்திவரும் அகாஷி - நாளை மறுதினம் கிளிநொச்சிக்கு விஜயம்செய்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கிளிநொச்சி, ஒட்டு...

சிறிலங்கா இராணுவத்தினரின் இந்தச் செயலைக் கண்டித்து ஒன்றுபட்ட தமிழ்மக்களே விழித்தெழுங்கள்.

அரசே! மிலேச்சத்தனமான இராணுவச் செயற்பாடுகளை நிறுத்து.

ஜனநாயக உரிமையோடு போராடும் எமது மக்களைக் கொல்வதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஆகிய கோஷங்களை எழுப்பியவாறு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து ஆரம்பமான கண்டனப் பேரணி - மனித உரிமை ஆணைக் குழு செயலகத்தில் மகஜர் கையளிப்புடன் நிறைவேறியது.

இந்தக் கண்டனப் பேரணியில் வெகுஜன இயக்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஒட்டுசுட்டானிலும் நேற்று கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமான கண்டனப் பேரணி ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் அலுவகம் வரை தொடர்ந்தது.

அங்கு அதிபர் பங்கயச்செல்வன் தலைமையில் கண்டனக்கூட்டம் இடம்பெற்றது.

இந்தப் பேரணியில் ஆசிரியர்கள், மாணவர்கள் பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை மன்னாரில் நேற்றும் இரண்டாவது நாளாக பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சந்திவெளி சம்பவத்தைக்கண்டித்து ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு மன்னார் மாவட்ட பொதுஅமைப்புகள் அழைப்பு விடுத்திருந்தன.

இதையடுத்து இரண்டாவது நாளாக நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்து. இதன்போது மாணவர்கள் வீதிகளில் ரயர் போட்டு எரித்து தமது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

இதனை தடுப்பதற்காக சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் மக்களை விரட்டி அடித்தனர் இதனால் ஆத்திரம் கொண்ட மக்கள் பொலிஸாரை நோக்கி கற்கள் மற்றும் தடிகளால் எறிந்து விட்டு சிதறிஓடினர்.

இதன்போது ஆத்திரமடைந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் மன்னார் மாவட்ட மாணவர் ஒன்றிய அலுவலகம் அருகில் இருந்த சினிமா திரையரங்கு என்பவற்றை சேதமாக்கினர்.

தமக்கு கற்களை வீசியவர்களை கைதுசெய்வதற்காக மாணவர்கள் ஒன்றிய அலுவலகத்திற்கு சென்றிருந்த படையினர், அங்கு நின்றிருந்த விடுதலைப்புலி உறுப்பினர் தமிழ் பரிதி என்பவரை கைதுசெய்தனர்.

இதனையடுத்து கண்காணிப் புக்குழுவினர் இராணுவத்தினருடன் நடத்திய பேச்சுக்களைஅடுத்து பி.ப 4 மணியளவில் பிணையில் அவர் விடுவிக் கப்பட்டார். இதனையடுத்து நேற்று மாலை நிலமை வழமைக்குத் திரும் பியதாக தெரியவருகிறது.

## ஜனாதிபதி சந்திரிகா கூறிவருவது...

உண்மையில் பொதுக்கட்டமைப்பு தமிழ் மக்களின் எல்லாத் தேவைகளையும் திருப்தி செய்யாவிட்டாலும், பொதுமக்களின் மனிதாபிமானரீதியான நிலைமையை விடுதலைப் புலிகளின் தலைமை உணர்ந்து, திட்டத்தை ஏற்றுக் கொண்டது. ஆனால், அரசாங்கம் சாதகமான பிரதிபலிப்பைக் காட்டத் தவறியதால், அந்த விடயம் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்கான எதிப்பைத் தெற்கில் தூண்டும் அதேவேளையில், அரசாங்கம் பேச்சிலிருந்து பின்வாங்கி நழுவித் தப்புவதற்கான ஒரு சூழலை உருவாக்கிறது. ஆனால், இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளும், ஆளும் கூட்டமைப்பின் கட்சிகளிடையேயான உள்வாரியான பிணக்கும், எங்களுக்கு அதிகம் நம்பிக்கையை ஊட்டுவதாக இல்லை.

பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான ஆக்கபூர்வ முயற்சிகளை எடுக்காமல், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தானாகவே கூற்றுக்களை வெளியிட்டுக்கொண்டிருக்கிறார். இந்த விடயத்தைப் பற்றிய ஒருமித்த சம்மதத்தை அவரது கட்சிக்குள் அதாவது, அவரது சொந்த பங்காளிக் கட்சிகளுடன் அவர் எதுவுமே செய்யவில்லை.

எமது கண்ணோட்டத்தில் அவரது கூற்றுக்கள் நடைமுறைச் சாத்தியமற்றவை. அந்தக் கூற்றுக்களைப் பொறுத்தவரையில் அவை எதிர்வரும் உதவி வழங்கும் மாநாட்டில், தனக்குச் சார்பான தீர்மானங்களை உதவி வழங்கும் நாடுகள் எடுக்கக் கூடியதாக, அந்த நாடுகளைச் செல்வாக்குக்கு உட்படுத்துவதற்கான வெறும் தந்திரோபாயமாகவும், சர்வதேச உதவியைச் கவர்வதற்கான வெறும் தந்திரோபாயமாகவுமே உள்ளன.

சமாதான முயற்சிகள் அப்படியே நின்றுவிட்டதுடன், நம்பிக்கையற்ற நிலையில் உள்ளது. சுனாமி, நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை உருவாக்கியது. இந்த வாய்ப்புக்களைக் கூட, அரசாங்கம் நிராகரித்து, அசிரத்தையாக இருப்பது, சமாதானத் தீர்வைக் காணும் அணுகுமுறைகள், சாத்தியமானவையாக இல்லாத ஒரு சூழலே இப்போது இருப்பதாக, எண்ண வைக்கிறது.

அரசாங்கம் எங்களுக்கு எதிரான ஒரு நிழல் யுத்தத்தை முனைப்பாக நடத்தியுள்ளது - என்பதை அண்மைக்காலச் சம்பவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்த நிழல் யுத்தம் எமது போராளிகளுக்கு எதிராக மட்டுமன்றி, கல்விமான்கள், பத்திரிகையாளர்கள் என்போருக்கு எதிராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. ஆயுதப் படைகளுடன்இயங்குகின்ற துணைப் படைகள் ஆயுதம் களையப்பட்டவையாயிருக்க வேண்டும் என்றும், வடக்கு - கிழக்கில் இருந்து அனுப்பப்படவேண்டும் என்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் தெளிவாகக் கூறுகின்றது. இருந்தும் நிழல் யுத்தம் தற்போதைய அரசால் முனைப்பாகச் செய்யப்படுகின்றது.

கிழக்கைப் பொறுத்த வரையில் இராணுவ உளவுப் பிரிவு நீண்ட காலமாகத் துணைப் படைகளைப் பயன்படுத்தி நடவடிக்கைகளைச் செய்துள்ளன. இந்தக் காலப் பகுதி கிழக்கில் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். துணைப் படைக் குழுக்கள் பலவற்றை இழந்தபின்னர், இராணுவ உளவுப் பிரிவு இப்போது அழிவு நடவடிக்கைகளை நடத்தவென கருணா பிரிவு என்பதை உரு வாக்கியுள்ளது.

இவற்றை நடத்துபவர்கள் இராணுவ முகாம்களில் நிலைகொண்டுள்ளனர், அல்லது இராணுவ முகாம்களுக்கு மிக அருகில் முகாம் அமைத்து நிலைகொண்டுள்ளனர். உள்ளூர் மக்கள் இதை நன்கு அறிந்துள்ளனர். நாம் எமது பகுதிகளை முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம். ஆனால் துணைப் படைகளின் செயற்பாடுகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே இடம் பெறுகின்றன.

நம்பத்தக்க சான்றுகளுடனேயே நாம் பல்வேறு முறைப்பாடுகளைச் செய்துள்ளோம். இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் இராணுவ உளவுப் பிரிவு இயங்குவதால் இவை இரண்டுக்கும் இடையே பார்த்தறியக் கூடிய எந்த வேறுபாடும் இல்லை. அரச படைகள் ஜனாதிபதியின் உறுதியான கட்டளைக்கும், கட்டுப்பாட்டுக்கும் கீழுள்ளது. ஆகவே, அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் அனுமதியின்றி இராணுவ உளவுப் பிரிவானது இப் போர் ஈடுபாடுகளைச் செய்வது சாத்தியமில்லாத விடயமாகும்.

இராணுவத்தின் நடத்தை, ஜே.வி.பி போன்ற இனவாதக் கட்சிகளுக்கு ஆதரவாகவே உள்ளது. எதிர்ப்புப் பேரணி நடத்துவோர் மீதான இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூடு, தமிழ் பொதுமக்களைக் கொல்லுதல், எமது போராளிகள் மீதான தாக்குதல்கள், குழப்பத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் ஆகிய எல்லாமே இராணுவமும் ஜே.வி.பியும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்கின்றன என்பதையே சுட்டிக்காட்டுகின்றன.

ஜே.வி.பி ஒரு பலமான சக்தியாக மாறிக்கொண்டிருப்பதற்கான பொறுப்பு ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் சாரும். இந்த நிலைபற்றி ஜே.வி.பி ஆரம்பத்திலேயே கூறியுள்ளது. இருந்தும் ஜனாதிபதி ஜே.வி.பியைத் தனது கூட்டமைப்பின் பங்காளியாக ஏற்றுக்கொண்டதுடன் அதன் வளர்ச்சிக்கும் இடமளித்தார். அவரும் அவரது அரசாங்கமும் ஜே.வி.பியின் வளர்ச்சிக்கு முழுப் பொறுப்பானவர்கள்.

ஜனாதிபதி சமாதானத்திற்கான உண்மையான அக்கறையைக் காட்டவேண்டும். அவ்வாறு அவர் ஈடுபாடு காட்டத் தயாராக இருந்தால், யுத்தத்தை நிறுத்துவது எளிதான விடயமாகும். நிழல் யுத்தம், அவருடைய திட்டங்களின் படியே நடத்தப் பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே அவர் தமிழ் மக்களுக்கு ஒரு நீதியான தீர்வை வழங்க அக்கறை கொண்டிருந்தால், அப்போது இது அவருக்கு ஒரு சிறு விடயமாக இருக்கும், மீறல்களுக்குப் பொறுப்பான பகுதியே, மீறல்களை நிறுத்த முடியுமான பகுதியாகும்.

நாம் அண்மையில் ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளோம். எமது விஜயத்தின்போது சர்வதேச சமூகத்தில் எம்மைப் பற்றிய பிழையான கருத்துக்கள், அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எமது மக்களாலும், தலைமையாலும் எடுக்கப்பட்ட தெளிவான, உறுதியான நிலைப்பாட்டை காட்டுவதன்மூலம், இவற்றை நாம் நீக்கக் கூடியவர்களாக இருந்தோம்.

அரசாங்கம் இந்த முயற்சியில் இறங்கியதற்கு, எமக்கும் எமது மக்களின் அபிலாஷைகளுக்கும் அவப்பெயரை ஏற்படுத்த மட்டுமேயன்றி, இனப்பிரச்சினைக்கு ஒரு அர்த்தமுள்ள நீடித்த தீர்வை உருவாக்குவதில் சர்வதேச ஆதரவைப் பெறும் அக்கறையினால் அல்ல. கடந்த மூன்று வருடங்களாக, நாம் மிகவும் பொறுமையாக இருந்துள்ளோம், விசுவாசத்துடன் சமாதானத்தைப் பெற எல்லா முயற்சிகளும் எடுத்துள்ளோம். 25 வருடகால பிரச்சினையால் பாதிப்புற்றுள்ள எமது மக்கள், மனிதாபிமான உதவியைப் பெற முடியுமானதும், இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியுமானதுமான ஒரு உகந்த சூழலை உருவாக்க நாம் கடுமையாக உழைத்துள்ளோம்.

ஆனால், இந்தக் குறிக்கோள் கடந்தகால, நிகழ்கால அரசாங்கங்களின் ஒத்துழைப்பதற்கான விருப்பமின்மை, ஈடுபாடின்மை என்பன காரணமாக நழுவிச் செல்வதாகவே தொடர்ந்திருக்கின்றன.

கடந்த 50 வருடங்களாக எமது தாயகமும், எமது மக்களும் சிங்கள அரசாங்கங்களாலும், அவர்களின் படைகளாலும் செய்யப்பட்ட அழிவுகளை எதிர்கொண்டுள்ளனர். எமது மக்களில் 50 ஆயிரம் பேருக்கு அதிகமானவர்களை நாம் இழந்துள்ளோம். தங்களுடைய சொந்தப் பிரதேசத்திலேயே ஆயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் வெளிநாடுகளுக்கு தப்பியோடியுள்ளனர். நாம் அவல நிலையையும், அழிவையுமே எதிர்கொண்டோம்.

இதன் காரணமாகத்தான், நாம் திருப்பிப் போராடவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானோம். எமது ஆயுதப் போராட்டம் வளர்ச்சிபெற்றுள்ளது. எமது தாயகத்தின் பெருமளவு பகுதிகளை ஆக்கிரமித்திருந்த படைகளை நாம் விரட்டக்கூடியதாக இருந்தது. அந்த இடங்களில் நாம் பொதுமக்களை மீளக் குடியமர்த்தியுள்ளோம். இப்பகுதிகளை நாமே நிர்வகிக்கின்றோம்.

கடற்புலிகள் அல்லது விமானப் படை அல்லது ஏனையவை போன்ற எவையாக இருந்தாலும், அவைகள் எல்லாவற்றையும் கொண்ட முழு இராணுவக் கட்டமைப்பு எமது தாயகத்தையும், எமது மக்களையும் பாதுகாக்க உருவாக்கப்பட்டது. இவை வேறு எந்த நாட்டையோ அல்லது மக்களையோ அச்சுறுத்த உருவாக்கப்பட்டவையல்ல. இதனால் எவருமே பயப்படத் தேவையில்லை.

எமது மக்கள் மீது ஒரு யுத்தம் திணிக்கப்பட்டால், அவர்கள் அதைத் தவிர்க்க இயலாது. அவர்கள் சமாதானத்துடன், சுதந்திரத்துடன், அடக்குமுறையின்றித் தங்களுடைய தாயகத்தில் வாழ விரும்பினால், எதிரியை எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும். இன்னொரு யுத்தம், இலங்கைத் தீவுக்குப் பெருமளவிலான அழிவைக் கொண்டுவரும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## நிவாரண உதவி...

லேயே உள்ளன. அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா உட்பட சில உதவி வழங்கும் நாடுகள் புலிகளிடம் நேரடியாக நிதியைக் கையளிக்கவிரும்பாத நிலையில், பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்ப விடுதலைப் புலிகளுடன் இணைந்து பணியாற்ற பொதுக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த வாரம் கண்டியில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பாதிக்கப்பட்டு நிவாரணம் வேண்டப்படுபவர்களுக்கு விரைவாக நிவாரண உதவிகள் வழங்கப்படுவது குறித்து ஆராயப்படும் என நிதியமைச்சின் பேச்சாளர் காமினி குணசேகர தெரிவித்தார்.

100 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நவம் அறிவுக்கூட கட்டடம்..

வணக்கம் செலுத்திய பின்னர் - நவம் அறிவுக்கூட பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்து மண்டபத்தையும் திறந்துவைத்தார். அதனைத் தொடர்ந்து அங்கு நினைவு மரத்தையும் அவர் நடுகை செய்தார்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் தமிழீழத் தேசியத் தலைவர் - புதிய கட்டட கட்டுமானப் போராளிகளுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

போராளி ஓவிய ஆசிரியர் நீதன் உருவாக்கிய மரச்செதுக்குச் சிற்பத்தை நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் தமிழீழத் தேசியத் தலைவரிடம் வழங்கினார்.

தொடர்ந்து நவம் அறிவுக்கூட போராளிகளால் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.